# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
# திருநெல்வேலி
# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY
# TIRUNELVELI

## தொலைநெறி தொடர்கல்வி இயக்கம்
## DIRECTORATE DISTANCE & CONTINUING EDUCATION
## TIRUNELVELI

# நன்னூல் - சொல்

முனைவர் த.க. ஜாஸ்மின் சுதா
துறைத்தலைவர் (பொ), உதவிப் பேராசிரியர்
தமிழியல் துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

2023-2024

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி – 627 012

# நன்னூல் - சொல் (பருவம் - 2)

## பாடத்திட்டம்

அலகு - 1

பெயரியல் (258 - 289)

பெயரியல் - சொல் - மூவகை மொழி - இருதிணை - ஐம்பால் - வழக்கு – குறிப்பு, வெளிப்படை - இயர்சொல் - திரிச்சொல் - திசைச்சொல் - வடச்சொல் - பெயர்ச்சொல்லின் பொது இலக்கணம் - உயர்திணைப் பெயர்கள் - அஃறிணைப் பெயர்கள் - இருதிணைப் பொதுப்பொயர் - தொழிற்பெயர் - பொதுப்பெயர்.

அலகு – 2

பெயரியல் (290 – 319)

ஆகுபெயரும் அதன் வகைகளும் - எண்வகை வேற்றுமைகள் விளியேற்கும் பெயர்கள் - விளியுருபுகள் - உயர்திணைப் பெயர்க்கு உரிய சிறப்பு விதிகள் - விளி ஏற்ப் பெயர்கள் - உருபு மயக்கம்.

அலகு - 3

வினையியல் (320 - 351)

தெரிநிலை வினை - வினைச்சொற்களின் வகைகள் - வினைமுற்று – தெரிநிலை வினைமுற்றின் பாகுப்பாடுகள் - பெயரெச்சம் - வினையெச்சம் - வினையெச்ச வாய்பாடுகள் - வினையெச்ச வாய்ப்பாடுகள் திரிதல் - சில முற்றுக்களுக்கு சிறப்பு விதி – முற்றெச்சம்.

அலகு - 4

பொதுவியல் (352 – 419)

ஒன்றொழிப் பொதுச்சொல் - உருபும் வினையும் அடுக்கி முடிதல் - இடைப்பிறவரல் - தொகைநிலைத் தொடர்மொழிகள் - வழு - வழாநிலை - வழுவமைதி – அறுவகை வினா – எண்வகை விடை - இரட்டைக்கிளவி – பொருள்கொளும் அதன் வகைகளும்.

அலகு – 5

இடையியல் (420 – 441)

இடையியல் : இடைச்சொல்லின் பொது இலக்கணம் - இடைச்சொற்களின் வகைகள்

(ஏகாரம், ஓகாரம், என, என்று, உம், தில், மன், மற்று, மற்றை, கொல் போன்றன) - எண்ணிடைச்சொற்கள்.

உரியியல் : உரிச்சொல்லின் இலக்கணம் - ஓரறிவு முதல் ஐந்தறிவு உயிர்கள் வரை – உயிர்ப்பொருள்களின் பண்புகள் - உயிரல் பொருள்களின் பண்புகள் - பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல் ஒரு குணம் தழுவிய பல உரிச்சொல் - புறனடை

முன்னுரை:

முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்குவது தமிழ்மொழி, இம்மொழியின் வளமைக்கும், செம்மைக்கும், சீர்மைக்கும் காரணமாக விளங்குவது இதன் இலக்கண நூல்களேயாகும். தமிழ்மொழியின் இலக்கணப்பரப்பும், இலக்கியம் போன்றே அதன் நீண்ட வரலாறும், நெடிய வளர்ச்சியும் என்றும் எண்ணியெண்ணி வியக்கதக்கன. முந்து கண்டு முறைப்பட வகுத்த நூல் தொல்காப்பியம். இந்நூல் மிகப் பழமையான நூலாயினும் தமிழ்மொழிக்குக் கிடைத்த முழுமுதல் இலக்கண நூலாக விளங்குகின்றது.

மிக விரிந்த சிந்தனை கடல்போலக் கொண்டுள்ளது தொல்காப்பியம். இதனைச் சுருக்கிச் சார்பு நூலாகப் பின்னால் வந்த இலக்கண நூல்களுள் தலைசிறந்து விளங்குவதாக அமைவது நன்னூல் ஆகும்.

நன்னூல் என்பதற்கு நல்ல நூல் என்பது பொருளாகும். நன்னூலுக்கு உரை வகுத்த மயிலைநாதர், ''தன்மையாற் பெயர்பெற்ற நன்னூல்'' எனக்குறிப்பார். எனவே நன்னூல் என்பது நன்மையாகிய நூல் எனப் பண்புதொகையில் அமையும். இந்நூலினை பின்னூல் எனவும் கூறுவர். தொல்காப்பியம் தொன்னூல் ஆனமையால் இது பின்னூல் எனக் குறிக்கப்பெற்றது. சிற்றதிகாரம் என்றும் இதனைக் குறிப்பர்.

இன்று பலராலும் பயிலப்பெற்று வருகிற பெருமையை உடையது நன்னூல். இது தோன்றிய பின்பு எழுந்த இலக்கண நூற்கள் யாவும் நன்னூலின் செல்வாக்கை அடையவில்லை. இதன் கருத்துக்களைப் பல இலக்கண நூற்கள் பின்பற்றி வந்துள்ளமையைக் காண முடிகின்றது. இந்நூல் தொல்காப்பியம் போன்று ஐந்து இலக்கணமும் கொண்டதாக இருந்திருக்கக் கூடும் என்ற கருத்தும் காணப்படுகிறது. நன்னூல் பாயிரத்தில் ''அறம்பொருள் ஐந்தையும் யாவரும் உணர'' எனவரும் ஹகுறிப்பும், பிற குறிப்புகளும் இவ்வாறு கருதுவதற்கு இடம் அளிக்கின்றன. எனினும் எழுத்து, சொல் என்ற இரண்டே கிடைத்துள்ளது.

## 1.பெயரியல்

பெயர்ச் செற்களின் இலக்கணங்களை உணர்த்தும் இயல். பெயரியல் எனப்படும்.

## கடவுள் வணக்கமும் அதிகாரத் தொடக்கமும்

258. **முச்சக நிழற்றும் முழுமதி முக்குடை**
**அச்சுதன் அடிதொழுது அறைக்குவன் சொல்லே**

மூன்று உலகங்களுக்கும் நிழலைச் செய்கின்ற நிறைந்த சந்திரன் போன்ற மூன்று குடைகளை உடைய அழியாத அருகக் கடவுளின் அடிகளை வணங்கிச் சொல்லின் இலக்கணத்தைச் சொல்லுவேன்.

## செல்லின் பொது இலக்கணம்

259. **ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா**
**இருதிணை ஐம்பால் பொருளையும் தன்னையும்**

**மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்**
**வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே**

ஒரு மொழி, தொடர் மொழி, பொது மொழி என்ற மூன்று பிரிவினை உடையதாய், இரண்டு திணைகளையும் ஐந்து பால்களையும், தன் பொருளையும் மூன்று இடங்களிலும், உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் விளக்குவது சொல்லாகும்.

## மூவகை மொழிகள்

260. **ஒருமொழி ஒருபொரு ளனவாம் தொடர்மொழி**
**பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன**

ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையே உணர்த்துமாயின் அஃது ஒரு மொழியாகும். பல சொற்கள் தொடர்ந்து நின்று பல பொருள்களை உணர்த்துமாயின் தொடர் மொழியாகும். ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளை தந்தும், அதுவே தொடர்ந்து நின்று பல பொருளைத் தந்தும், இவ் இரண்டிற்க்கும் பொதுவாக நிற்க்குமாயின் அது பொது மொழியாகும்.

(எகா)

ஒரு மொழிகள் : நிலம், நிலத்தன், நட, நடந்தன், தில், மன், தவ, நனி

தொடர் மொழிகள் : நிலம் வலிது, அது கொல், ஊர் அறிந்த உண்மை

பொது மொழிகள் : எட்டு, தாமரை, வேங்கை

## இரு திணை

**261. மக்கள் தேவர் நரகர் உயர்திணை**
**மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை**

மனிதர்களும், தேவர்களும் அசுரர்களும் உயர்திணையாகும். இவர் இல்லாத விலங்கு, பறவை முதலிய உயிர் உள்ளனவும், நிலம், நீர் முதலிய உயிர் இல்லாதனவும் அஃறிணையாகும்.

(எகா)

உயர்திணை : மக்கள், தேவர், அசுரரர்

அஃறிணை : (உயிர் உள்ளவை) பறவை மிருகம் (உயிர் இல்லாதவை) நிலம் நீர் போன்றன.

## உயர்திணை பால்கள் - 3

**262. ஆண்பெண் பலர்என முப்பாற்று உயர்திணை**

ஆண்பால், பெண்பால், பலர்பால் என்ற மூன்று பால்களை உடையது உயர்திணை.

## அஃறிணைப் பால்கள் - 2

**263. ஒன்றே பலவென்று இருபாற்று அஃறிணை**

ஒன்றன்பால், பலவின்பால் என்ற இருபால்களை உடையது அஃறிணை.

## திணை, பால்களுக்குப் புறனடை

**264. பெண்மைவிட்டு ஆண்அவா வுவபேடு ஆண்பால்**
**ஆண்மைவிட்டு அல்லது அவாவுவ பெண்பால்**
**இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும்**

பெண் தன்மையை விட்டு ஆண் தன்மையினை கொண்டுள்ளவர்கள் உயர்திணை ஆண்பாலாகும், ஆண்தன்மையை விட்டு பெண்தன்மையை கொண்டுள்ளவர்கள் உயர்திணைப் பெண்பால் ஆகும். இவ்விருவரையும் உயர்திணைக்கு மட்டும் இன்றி அஃறிணைக்கும் வழங்குதலும் உண்டு.(இரண்டு பாலினத்தவரையும் பொதுவாக கூறும்போது அஃறிணையில் வரும்)

(எகா)

ஆண்பால் : அலி வந்தான்

பெண்பாள் : பேடி அணியாளோ

அஃறிணை முடிப : அலி வந்தது, பேடி வந்தது

## சொல் தன்னையும் பொருளையும் உணர்த்துதல்

**265. படர்க்கை வினைமுற்று நாமம் குறிப்பின்**
**பெறப்படும் திணைபால் அணைத்தும் ஏனை**
**இடத்தவற்று ஒருமைப் பன்மை பாலே**

படர்க்கை இடத்தில் வைத்து வினைமுற்றுச் சொல்லையும், பெயர்ச் சொல்லையும் சொன்னால் இருதிணையும், ஐம்பாலும் பெறப்படும். தன்மை, முன்னிலை இடங்களில் வைத்து வினைமுற்றுச் சொல்லையும், பெயர்ச் சொல்லையும் சொன்னால் இருதிணை, ஐம்பால்களுள் ஒருமைப்பாலும், பன்மைப்பாலும் மட்டுமே பெறப்படும்.

| **ஊயர்திணை** | **ஆண்பால்** | **பெண்பால்** | **பலர்பால்** |
|---|---|---|---|
| படர்கை விணைமுற்று : | நடந்தான் | நடந்தாள் | நடந்தார் |
| பெயர் : | அவன் | அவள் | அவர் |

| **அஃறிணை** | **ஒன்றன்பால்** | **பலவின்பால்** |
|---|---|---|
| படர்கை விணைமுற்று : | நடந்தது | நடந்தன |
| பெயர் : | அது | அவை |

| **இருதிணைப்** | **ஒருமை** | **பன்மை** |
|---|---|---|

**போது**

| | | |
|---|---|---|
| தன்மை வினைமுற்று : | நடந்தேன் | நடந்தோம் |
| தன்மைப் பெயர் : | யான் | யாம் |
| முன்னிலை வினைமுற்று : | நடந்தாய் | நடந்தீர் |
| முன்னிலைப் பெயர் : | நீ | நீர் |

## மூவிடங்கள்

**266. தன்மை முன்னிலை படர்க்கைமூ விடனே**

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடங்கள் மூன்று வகைப்படும்.

## வழக்கு

**267. இலக்கணம் உடையது, இலக்கணப் போலிஈ**
**மரூஉஎன்று ஆகும் மூவகை இயல்பும்**
**இடக்கர் அடக்கல், மங்கலம், குழூஉக்குறி**
**என்னும்முத் தகுதியோடு ஆறாம் வழக்கியல்**

இலக்கணம் உடையது, இலக்கணப் போலி, மரூஉ என்று வழங்குகின்ற மூவகை இயல்பு வழக்குகளும், இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என்று வழங்குகின்ற மூன்று தகுதி வழக்குகளும் ஆக வழக்கிலக்கணம் ஆறு வகைப்படும்.

(எகா)

தகுதி வழக்கு:

1.இடக்கரடக்கல்

மலங்கழுவி வந்தான் என்கதை ‘‘கால் கழுவி வந்தான்’’.

2.மங்கலம்

செத்தாரைத் ‘‘துஞ்சினார்’’ என்று வழங்குதல்.

3.குழூஉக்குறி

பொற் கொல்லர் பொன்னைப்’’பறி’’ என்று வழங்குதல்

இயல்பு வழக்கு:

1.இலக்கண முடையது

நிலம், நீர், காற்று, ஆகாயம்

2.இலக்கணப் போலி

இல்முன் என்பதை ‘‘முன்றில்’’ என்றும், நகர்ப்புறம் என்பதனைப் புறநகர் என்றும் வழங்குதல்.

3.மரூஉ

தஞ்சாவூரைத் தஞ்சை என்று வழங்குதல்.

## செய்யுள்

**268. பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போல்பல**
**செல்லால் பொருட்குஇட னாக உணர்வினில்**
**வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்**

தோல், இரத்தம், இறைச்சி, எலும்பு முதலிய பலவகை தாதுக்களினால் உயிர்க்கு இடமாகச் செய்யப்பட்ட உடம்பு போல பலவகைச் சொற்களால் பொருளுக்கு இடமாகக் கல்வியறிவினால் செய்யுள் செய்ய வல்லவரால் அலங்காரம் தோன்றச் செய்யப்படுபவை செய்யுளாகும்.

(எகா)

‘‘அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு’’

இக்குறள்வெண்பா கடவுள் வாழ்த்து என்னும் பொருளுக்கு இடமாகி, எடுத்துக் காட்டுவமை அணியும் பெற்று, செய்யுளாய் அமைந்திருத்தல் காண்க.

## குறிப்பும் வெளிப்படையும்

**269. ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி**
**ஆகு பெயர்அன் மொழிவினைக் குறிப்பே,**
**முதல்தொகை குறிப்போடு இன்ன பிறவும்**
**குறிப்பின் தருமொழி, அல்லன வெளிப்படை**

இரு திணையிலும் ஆண்பால், பெண்பால்களுள் ஒன்றனை ஒழிக்கும் பொதுச் சொற்களும். வலித்தல், மெலித்தல் முதலிய ஒன்பது வகைச் செய்யுள் விகாரச் சொற்களும். மூவகைத் தகுதி வழக்குச் சொற்களும். வினைக் குறிப்புச் சொற்களும். முதலில் நிற்கிற மொழியைக் குறிக்கிற சொற்களும். பொருளின் தொகையைக் குறிக்கிற சொற்களும். இம் முதல்குறிப்பும், தொகைக் குறிப்புச் சொற்களும். இவை போல்வன பிறவும் குறிப்பினால் இருதிணை, ஐம்பால் பொருள்களைத் தரும் சொற்களாகும். அவை அல்லாதனவெல்லாம் வெளிப்படையாகப் பொருள்களைத் தரும் சொற்களாகும்.

(எகா)

1. ஒன்றொழி பொதுச் சொல்

இவர்க்கு மஞ்சள் குங்குமம் நிலைக்க - ஆண்களை ஒழித்துப் பெண்களைக் குறித்தது

கோழி கூவிற்று - பெண்பாலை ஒழித்து ஆண்பாலை உணர்த்தியது.

2. செய்யுள் விகாரச் சொல்

குறுந்தாட் பூதம், மரை மலர்.

3. தகுதி வழக்குச் சொற்கள்

கால் கழுவி வந்தான்.

4. ஆகு பெயர்

புளி தின்றான், ஊர் சிரித்தது.

5. அன்மொழித் தொகைகள்

பொற்றொடி தந்த புனைமடல்.

6. வினைக் குறிப்புச் சொற்கள்

இவன் கரியன், அவன் பொன்னன்.

7. முதற்குறிப்பு

ஆத்திச் சூடி படித்தான்.

8. தொகைக் குறிப்புச் சொல்

அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ (இங்கு ஐவர் பாண்டவர்களை குறித்தது)

9. பிற குறிப்பால் பொருள் உணர்த்துவது

நன்கு சமைத்தாய் (நன்கு சமைக்கவில்லை)

10. வெளிப்படையாய் பொருள் உணர்த்துவது

நிலம், நீர், காற்று.

## சொல்லின் பாகுபாடு

**270. அதுவே**
**இயற்ச்சொல், திரிச்சொல், இயற்பிற் பெயர்வினை**
**எனஇரண்டு ஆகும். இடைஉரி அடுத்து**
**நான்கும் ஆம்திசைவட சொல்அணு காவழி**

மேற்காட்டிய சொல் இயற்சொல்லும் திரிசொல்லும் என்னும் தன்மையையுடைய பெயர்ச் சொல், வினைச்சொல் என்று இரண்டு வகைப்படும். இவற்றுடன் திசைச் சொல், வடச் சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

## இயற்சொல்

**271. செந்தமி ழாகித் திரியாது யார்க்கும்**

**தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்செல்**

செந்தமிழ் நாட்டில் வழங்கும் சொற்கள் கற்றவர்களுக்கு மட்டும் இன்றி கல்லாதவர்களுக்கும் புரியும் தன்மையுடையது உலக வழக்குச் சொற்களே இதுவே இயற்சொல்லாகும்.

(எகா)

பெயர் இயற்சொல் - மண், மரம்.

வினை இயற்சொல் - வந்தான், இருந்தான்.

இடை இயற்சொல் - அவனை, அவனால்.

உரி இயற்சொல் - அன்பு, அறிவு.

## திரிசொல்

**272. ஒருபொருள் குறித்த பலசொல் ஆகியும்**
**பலபொருள் குறித்த ஒருசொல் ஆகியும்**
**அரிதுணர் பொருளன திரிசெல் ஆகும்**

ஒரு பொருளை உணர்த்தும் பல சொல்லும். பல பொருள் உணர்த்தும் ஒரு சொல்லும் அரிதாக கற்றவர்கள் மட்டுமே அரியக்கூடிய பொருள் உடையது திரிசொல்.

(எகா)

ஒரு பொருள் உணர்த்தும் பல சொல் - கிள்ளை, தத்தை (கிளி)

பல பொருள் உணர்த்தும் ஒரு சொல் - வாரணம் (யானை, கோழி, அங்கு)

## திசைச் சொல்

**273. செந்தமிழ் நிலம்சேர் பன்னிரு நிலத்தினும்**
**ஒன்பதிற்று இரண்டினில் தமிழ்ஒழி நிலத்தினும்**
**தம்குறிப் பினவே திசைச்சொல் என்ப**

செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு நிலங்களிலும் பதினெட்டு மொழிகளுள் தமிழ் நிலம் ஒழிந்த பதினேழு நாடுகளில் வசிப்போர், தம் குறிப்பினவாய் அத்திசைகளினின்றும் செந்தமிழ் நிலத்து வந்து வழங்குவன திசைச் சொற்களாகும் என்று சொல்லுவர் புலவர்.

(எகா)

பசுவைப் பெற்றம் என்பதும் - தென்பாண்டி நாட்டு வழக்கு
தாயைத் தள்ளை என்பது - குட்ட நாட்டு வழக்கு

தந்தையை அச்சன் என்பது - குடநாட்டு வழக்கு
வஞ்சகரைக் கையர் என்பது - கற்கா நாட்டு வழக்கு
தோட்டத்தைக் கிழார் என்பது - வேணாட்டு வழக்கு
சிறுகுளத்தைப் பாழி என்பது - பூழி நாட்டு வழக்கு
வயலைச் செய் என்பது - பன்றி நாட்டு வழக்கு
சிறுகுளத்தைக் கேணி என்பது - அருவா நாட்டு வழக்கு
புளியை எகின் என்பது – அருவா வடதலை நாட்டு வழக்கு
தோழனை எலுவன் என்பது
தோழியை இகுளை என்பதும் - சீதநாட்டு வழக்கு
நல்ல நீரை வெள்ளம் என்பது – மலையமானாட்டு வழக்கு
தாயை ஆய் என்பது – சோழநாட்டு வழக்கு

## வடசொல்

**274. பொதுஎழுத் தானும் சிறப்புஎழுத் தானும்
ஈர்எழுத் தானும் இயைவன வடசொல்**

ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவாக அமைந்த எழுத்துக்களாலும், ஆரியத்திற்கே உரிய சிறப்பு எழுத்துக்களாளும், பொதுவும் சிறப்புமாகிய இவ்விருவகை எழுத்துக்களாலும் செந்தமிழ் சொற்களுக்கு ஏற்ப அமைந்து வடதிசையிலிருந்து செந்தமிழ் நிலத்து வந்து வழங்குவன வட சொற்களாகும்.

(எகா)

அமலம், கமலம், மேரு, காரணம், காரியம் - என்பது பொது எழுத்து

சுகி, போகி, சுத்தி, சித்தி – என்பது சிறப்பு எழுத்து

அரன், அரி, கடினம், சலம் - என்பது ஈரெழுத்துகள்

## பெயரின் பொது இலக்கணம்

**275. இடுகுறி காரண மரபோடு ஆக்கம்
தொடர்ந்து தொழில்அல காலம் தோற்றா
வேற்றுமைக்கு இடனாய்த் திணைபால் இடத்துஒன்று
ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே**

இடுகுறியும் காரணக் குறியும் மரபினையும் ஆக்கப் பாட்டினையும் தொடர்ந்து வினையாலணையும் பெயர்கள் மட்டும் காலத்தைக் காட்ட, அல்லாதன காலம் காட்டாதனவாகி எட்டு வேற்றுமைகளும் சார்தற்கு இடமாய் அமைந்து நின்று. இரு திணையிலும் ஐம்பாலிலும் மூவிடத்திலும் ஒன்றை ஏற்று வருவனவும் பலவற்றினை ஏற்று வருவனவும் ஆகி அமைவன பெயர்ச் சொற்கள் ஆகும்.

(எகா)

ஆண், பெண், மரம், பனை - இடுகுறி
அவன், அவள், பறவை, விலங்கு – காரணக்குறி
முட்டை, பொன்னன் - ஆக்கப்பெயர்கள்

## உயர்திணை ஆண்பால் பெயர்கள்

**276. அவற்றுள்**
**கிளை எண் குழூஉமுதல் பல்பொருள் திணைதேம்**
**ஊர்வான் அகம்புறம் முதல நிலயாண்டு**
**இருது மதிநாள் ஆதிக் காலம்**
**தோள்குழல் மார்புகண் காதுமுதல் உறுப்பு**
**அளவு, அறிவு ஒப்பு வடிவு நிறம்கதி**
**சாதி குடிசிறப்பு ஆதிப் பல்குணம்**
**ஓதல் ஈதல் ஆதிப் பல்வினை**
**இவைஅடை சுட்டு வினாப்பிற மற்றோடு**
**உற்ற னவ்வீறு நம்பி ஆடூஉ**
**விடலை கோவேள் குரிசில் தோன்றல்**
**இன்னன ஆண்பெயர் ஆகும் என்ப.**

நூற்பாவில் கூறப்பட்ட அப்பெயர்கள் சுற்றம், எண், கூட்டம் முதலியவற்றால் வரும் பொருளாள் வரும் பெயர்கள். ஐந்திணை, தேயம், ஊர், வான், அகம், புறம், முதலியவற்றால் வருவன. இடப்பெயர்களால் வருவன. ஆண்டு, பருவம், மாதம், நாள், முதலியவற்றால் வருவன. காலத்தால் வருவன. தோள், மயிறு, காது, கண், மார்பு முதலிய சினைப்பெயரால் வருவன. அளவு பலவாய குணங்களின் பெயர்களால் வருவன. ஓதல், ஈதல் போன்ற தொழில்களால் வருவன. இவற்றை அடுத்து சுட்டு வினாக்களும், பிற மற்று என்பனவாகிய பெயர்களும். நம்பி, ஆடூஉ, விடலை, கோ, வேள், குரிசில் தோன்றல் என்ற பெயர்களும் இவை போன்ற பிறவும் உயர் திணை ஆண்பாற் பெயர்களாகும்.

(எகா)

பொருளால் வரும் பெயர்கள்

1. தமன், நமன், நுமன், எமன் - கிளையால் வரும் பெயர்
2. ஒருவன் - எண்ணால் வரும்பெயர்
3. சங்கத்தான், அவையத்தான் - குழூஉவால் வரும் பெயர்
4. பொருளன், பொன்னன் - என்றதனால் வரும் பெயர்

இடத்தால் வரும் பெயர்
1. ஊரான், மகிழ்நன் - மருத நிலத்தால் வருபெயர்
2. ஆத்துரான், மதுரையான் - ஊரால் வரும் பெயர்
   இவை போன்ற பிற பெயர்களும் வரும்

காலத்தால் வரும் பெயர்கள்

1. சுபானுவான், காரான் - பருவத்தால் வரும் பெயர்

2. இளவேனிலான் - பருவத்தால் வரும் பெயர்
இவை போன்ற பிற பெயர்களும் வரும்

சினையால் வரும் பெயர்

திணி தோளான், கரிகுழலன் வரை மார்பன் போன்ற பெயர்கள்
குணத்தால் வரும் பெயர்கள்

1. பெரியன், சிறியன் - அளவால் வரும் பெயர்
2. அறிஞன், புலவன் - அறிவால் வரும் பெயர்
இவை போன்ற பிற பெயர்களும் வரும்

தொழிலால் வரும் பெயர்

ஓதுவான், ஈவான்

இடைச்செல்லால் வரும் பெயர்கள்

அவன், இவன், உவன் - சுட்டால் வரும் பெயர்கள் இவைப்போன்ற பிறவும்.

## உயர்திணைப் பெண்பாற் பெயர்

**277. கிளைமுத லாக்கிளந்த பொருள்களுள்
எவ்வொற்று இகரக்கு ஏற்ற ஈற்றவும்
தோழி செவிலி மகடூஉ நங்கை
தையலோடு இன்னன பெண்பால் பெயரே**

முன் நூற்பாவில் கிளை முதலாகக் கூறப்பட்ட அறுவகை பொருள்களுள்ளும் இடைச்சொற்களுள்ளும் ஒன்றின் அடியாகத் தோன்றி, 'ள்' என்ற மெய்யும் 'இ' என்ற உயிரும் பொருந்துவதற்க்கு ஏற்ற அவ்விரண்டு ஈற்றுப் பெயர்களும் தோழி, செவிலி, மகடூஉ, நங்கை தையல் என்னும் பெயர்களும், இவைப் போல்வன பிறவும் உயர்திணை பெண்பால் பெயர்களாகும்.

(எகா)

பொருளாள் வரும் பெயர்கள்

தமள், நமள், நுமள், எமள்

இடத்தால் வரும் பெயர்கள்

குறத்தி, உழத்தி, பரத்தி போன்றன

காலத்தால் வரும் பெயர்கள்

தையாள் - மாதத்தால் வரும் பெயர்
ஆதிரையாள் - நாளால் வரும் பெயர்

சினையால் வரும் பெயர்கள்

திணித்தோளாள், கரிகுழலாள், நெடுமார்பாள்

குணத்தால் வரும் பெயர்கள்

பெரியள் - அளவால் வரும் பெயர்
புலமையாள் - அறிவால் வரும் பெயர்

தொழிலால் வரும் பெயர்கள்

ஓதுவாள், ஈவாள்

இடைச்சொல்லால் வரும் பெயர்கள்

அவள், இவள் - சுட்டு பெயர்
எவள், ஏவள் - வினா பெயர்

## உயர்திணை பலர்பாற் பெயர்

**278. கிளந்த கிளைமுதல் உற்றரவ் வீற்றவும்
கள்என் ஈற்றின் ஏற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி ஆகும்**

முன் நூற்பாவில் கூறியது போல அறுவகைப் பொருள்களையும் இடைச்சொல்லையும் அடியாக கொண்டு தோன்றிய 'ர்' என்ற மெய்யீற்றுப் பெயர்களும் 'கள்' என்னும் விகுதியை ஈறாக உடைய பெயர்களுள் பலர்பாலுக்கு பொருந்தி வருவனவாம். இவை போன்ற பிறவும் உயர்திணைப் பலர்பாற் பெயர்கள் ஆகும்.

(எகா)
பொருளாள் வரும் பெயர்கள்

தமர், நமர் - கிளைப் பெயர்
இருவர், மூவர் - எண் பெயர்

இடத்தால் வரும் பெயர்கள்

குறவர், உழவர், பரதவர்

காலத்தால் வரும் பெயர்கள்

வேனிலனார், ஐப்பசியார்

சினையால் வரும் பெயர்கள்

திணித்தோளார், நெடுமார்பார்

குணத்தால் வரும் பெயர்கள்

பெரியர், அறிஞர்

தொழிலால் வரும் பெயர்கள்

ஓதுவார், ஈவார்

இடைச்சொல்லால் வரும் பெயர்கள்

அவர், இவர்

## அஃறிணை ஒன்றன்பாற் பெயர்

**279. வினாச்சுட் டுடனும் வேறு மாம்பொருள்**
**ஆதி யுறுதுச் சுட்டணை ஆயுதம்**
**ஒன்றென்எண் இன்னன ஒன்றன் பெயரே**

வினாவிலும் சுட்டிலும் மறைந்து அவற்றுடனாகியும், வினாவாகவும் சுட்டவும் படாது வேறாகியும் வரும் பொருள் முதலிய ஆறினையும் அடியாகக் கொண்டு தோன்றும் 'து''வ்' விகுதியீற்றுப் பெயரும், சுட்டொடு கூடிய ஆய்த எழுத்தைப் பெற்றுவரும் 'து''வ்' விகுதியீற்றுப் பெயரும், ஒன்று என்னும் எண்ணாகும் பெயரும். இவை போன்ற பிறவும் அஃறிணை ஒன்றன்பாற் பெயர்களாம்.

(எகா)

எது, ஏது, யாது - வினாப்பெயர்
அது, இது, உது – சுட்டுப்பெயர்
அஃது, இஃது - ஆய்தம்
ஒன்று - எண்ணாகுப் பெயர்

## அஃறிணைப் பலவின்பாற் பெயர்

**280. முன்னர் அவ்வொடு வருவை அவ்வும்,**
**சுட்டுஇறு வவ்வும், கள்இறு மொழியும்,**
**ஒன்றஅல் எண்ணும், உள்ள இல்ல**
**பல்ல சில்ல உளஇல பலசில**
**இன்னவும் பலவின் பெயரா கும்மே**

முன் நூற்பாவில் கூறப்பட்ட வினாச் சுட்டுடனும், அவற்றின் வேறாகியும் வரும் பொருள் முதலியன ஆறனோடும் ஏற்றப்படி வரும் 'வை' விகுதியீற்றுப் பெயர்களும், வகர மெய்யை ஈறாக உடைய சுட்டுபெயர்களும் கள் என்னும் பகுதிப் பொருள் விகுதியீற்றுப் பெயர்களும், இரண்டு முதலிய எண்ணாகும் பெயர்களும், உள்ள இல்ல பல்ல சில்ல உள இல சில பல என்னும்

எட்டுக்குறிப்பு வினையாலணையும் பெயர்களும், இவை போல்வன பிறவும் அ.்.றிணைப் பலவின்பாற் சொற்களாகும்.

(எகா)

எவை, ஏவை, யாவை – வை விகுதி பெற்ற வினாப் பெயர்
அவை, இவை, உவை - வை விகுதி பெற்ற சுட்டுப் பெயர்கள்
நெடியவை, கரியவை – வினாச்சுட்டில் வேறாகி வரும் 'வை' யீற்றுப் பெயர்கள்
பொருள, பொருளன, - அன் சாரியை பெற்றதும் பெறாததும் வந்த அகர விகுதிப் பெயர்கள்
அவ்,இவ்,உவ் - வகர மெய்யீற்று சுட்டுப் பெயர்கள்
குதிரைகள் - கள் விகுதிப் பெயர்கள்
இரண்டு, மூன்று – எண்ணாகு பெயர்கள்

## பால்பகா அ.்.றிணைப் பெயர்

**281. பால்பகா அ.்.றிணைப் பெயர்கள்பால் பொதுமைய**

அ.்.றிணைப் பெயர்களுல் ஒன்றன்பால், பலவின்பால் எனப் பகுக்க முடியாத பெயர்ச் சொற்கள், அத்திணையின் இரு பால்களுக்கும் பொதுவாகிய பெயர்களாகும்.

(எகா)

யானை வந்தது – யானை வந்தன
மரம் வளர்ந்தது – மரம் வளர்ந்தன

## இருதிணைப் பொதுப்பெயர்

**282. முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும்,**
**சினைமுதற் பெயர்ஒரு நான்கும் முறைஇரண்டும்**
**தன்மை நான்கும் முன்னிலை ஐந்தும்,**
**எல்லாம், தாம், தான், இன்னன பொதுப்பெயர்**

முதற்பெயர்கள் நான்கும், சினைப்பெயர்கள் நான்கும், சினைமுதற்பெயர்கள் நான்கும், முறைப் பெயர்கள் இரண்டும், தன்மைபட பெயர் நான்கும், முன்னிலைப் பெயர் ஐந்தும், எல்லாம் தாம் என்பனவும் இவை போன்ற பிறவும் இருதிணைக்குப் பொதுப் பெயர்களாம்.

## முதற்பெயர் முதலிய நான்கினையும் வகுத்தல்

**283. ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின்**
**ஆம்அந் நான்மைகள் ஆண்பெண் முறைப்பெயர்**

ஆண்மை பெண்மை ஒருமை பன்மை என்னும் நான்கு பாலும் காரணமாக அம் முதலியார், சினைப்பெயர், சினை முதற்பெயர் என்னும் மூன்றும் ஒவ்வொன்றும் நந்நான்காகும். ஆண்மை பெண்மை என்ற இருபால்கள் காரணத்தால் முறைப்பெயர் இரண்டாகும்.

(எகா)

முதற் பெயர் நான்கு

1. சாத்தான் - ஆண்மை முதற்ப்பெயர்
2. சாத்தி – பெண்மை முதற்ப்பெயர்
3. கோதை – ஒருமை முதற்ப்பெயர்
4. கோதைகள் - பண்மை முதற்பெயர்

சினைப்பெயர் நான்கு

1. முடவன் - ஆண்மை சினைப்பெயர்
2. முடத்தி – பெண்மை சினைப்பெயர்
3. செவிலி – ஒருமை சினைப்பெயர்
4. செவிலிகள் - பண்மை சினைப்பெயர்

சினை முதற் பெயர் நான்கு

1. முடக் கொற்றன் - ஆண்மைச் சினை முதற்ப்பெயர்
2. முடக் கொற்றி - பெண்மைச் சினை முதற்ப்பெயர்
3. கொடும் புற மருதி – ஒருமைச் சினை முதற்ப்பெயர்
4. கொடும் புற மருதிகள் - பண்மை சினை முதற்பெயர்

முதற் பெயர் இரண்டு

1. தந்தை – ஆண்மை முறைப் பெயர்
2. தாய் - பெண்மை முறைப் பெயர்

## திணைப் பொதுப் பெயர்கள், பாற் பொதுவாதல்

**284. அவற்றுள்,**
**ஒன்றே இருதிணைத் தன்பால் ஏற்க்கும்**

முதற்பெயர் முதலாகச் சொல்லப்படும் இருபத்தாரும் பிறவுமாகிய பொதுப்பெயர்களுள், ஒவ்வென்றும் இருதிணையிலும் தன் தன் பால்களை ஏற்று வரும்.

(எகா)

முதற்ப்பெயர் நான்கு

சாத்தான் இவன் - ஆண்மை முதற்பெயர்
சாத்தி இவள் - பெண்மை முதற்பெயர்

கோதை இவன் - ஒருமை முதற்பெயர்
கோதைகள் இவர் - பன்மை முதற்பெயர்

சினைப் பெயர்கள்

முடவன், முடத்தி போன்ற பிறவும்

சினைமுதற்ப் பெயர்கள்

முடக்கொற்றன், முடக்கொற்றி போன்ற பிறவும்

முறைப் பெயர்கள்

தந்தை இவன், தாய் இவள்

தன்மைப் பெயர்கள்

யாம் நம்பி, யாம் மக்கள்

முன்னிலைப் பெயர்கள்

நீ நம்பி, நீர் மக்கள்

எல்லாம், தாம், தான்

அவர் எல்லாம், அவர் தாம், அவன் தான்

## தன்மை – முன்னிலை – படர்கைப்பெயர்கள்

**285. தன்மை யான்நான் யாம்நாம் முன்னிலை**
**எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ**
**அல்லன படர்க்கை எல்லாம் எனல் பொது**

தன்மை பெயர்கள் யான், நான், யாம், நாம், என்னும் நான்காகும். முன்னிலைப் பெயர்கள் எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ என்னும் ஐந்தாகும். இவ்வொன்பதும் இல்லாதப்பெயர்கள் எல்லாம் படர்க்கை இடத்திற்கு உரியனவாகும். அவற்றுள் ‘எல்லாம்’ என்னும் பெயர் மட்டும் மூன்றிற்கும் பொதுவாகும்.

(எகா)

யாம் எல்லாம், நீர் எல்லாம், அவர் எல்லாம், அவை எல்லாம்

## தொழிற் பெயருக்கும், வினையாலணையும் பெயர்க்கும் இடம் வகுத்தல்

**286. வினையின் பெயரே படர்க்கை வினையால்**
**அணையும் பெயரே யாண்டும் ஆகும்**

(எகா)

கற்றல் நன்று, வருகை நன்று – படர்க்கை பெயர்கள்
உண்டேனை, உண்டாயை – வினையாலணையும் பெயர்கள்

## பன்னிரு பொதுப்பெயர்கள்

**287. தான்யான் நான்நீ ஒருமை பன்மைதாம்**
**யாம்நாம் எலாம்எலீர் நீயிர்நீர் நீவிர்**

தான், யான், நான், நீ என்னும் நான்குப் பெயர்களும் ஒருமைப் பெயர்களாகும். தாம், யாம், நாம், எல்லாம், எலீர், நீயிர், நீர், நீவிர் என்னும் இவ்வெட்டுப் பெயர்களும் பன்மைப் பெயர்களாகும்.

## என்னால் வரும் உயர்திணைப் பெயருக்கு புறனடை

**288. ஒருவன் ஒருத்திப் பெயர்மேல் எண்ணில**

ஒன்று என்ற எண்ணை அடிப்படையாக கொண்டு ஒருவன், ஒருத்தி என்றப் பெயர்கள் தோன்றுமேயன்றி, ஒன்றக்கு மேற்பட்ட இரண்டு முதலிய எண்களை கொண்டு ஆண்பாற், பெண்பாற் பெயர்கள் தோன்றாது.

**289. ஒருவர் என்பது உயர்இரு பாற்றாய்ப்**
**பன்மை வினைகொளும் பாங்கிற்று என்ப**

ஒருவர் என்னும் சொல் உயர்திணை ஆண்பால், பெண்பால் என்ற இருபாற்கும் பொதுவாய் உயர்திணை பலர்பால் வினையை கொண்டு முடியும்.

(எகா)

ஆடவருள் ஒருவர் அறத்தின் வழி நிற்பார்
பெண்டிருள் ஒருவர் கணவன் வழி நிற்பார்

## ஆகுபெயர்

**290. பொருள்முதல் ஆறோடு அளவைச்சொல் தானி**
**கருவி, காரியம், கருத்தன ஆதியுள்**
**ஒன்றன பெயரான் அற்குஇயை பிறிதைத்**
**தொன்முறை உரைப்பன ஆகுபெயரே**

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறும், எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை அளவும், சொல்லும், தானியும், காரணமும், காரியமும், கருத்தாவும் இவை முதலான பொருள்களும், ஒரு பொருளினது இயற்பெயர் அதனோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குத் தொன்றுதொட்டு ஆகிவருவது ஆகுபெயர் எனப்படும்.

(எகா)

1. பொருளாகு பெயர்

தாமரை முகம்

2. இடவாகு பெயர்

ஊர் சிரித்தது, தமிழகம் மகிழ்ந்தது.

3. காலவாகு பெயர்

கார் அறுத்தது, டிசம்பர் பூத்தது.

4. சினையாகு பெயர்

வெற்றிலை நட்டான், தலைக்கு ஒன்று கொடு.

5. குணவாகு பெயர்

நீளம் சூடினாள், வெள்ளை அடித்தாள்

6. தொழிலாகுப் பெயர்

வற்றல் உண்டான், பொங்கல் சாப்பிட்டான்

7. எண்ணலளவை ஆகுபெயர்

கால் வலித்தது, இப்பசுக்களில் இரண்டு என்னுடையது.

8. எடுத்தலளவை ஆகுபெயர்

ஐந்நூறு கிராம் தந்தான், இரண்டு விசை கொடு.

9. முகத்தலளவை ஆகுபெயர்

நாழி கொடு, ஐந்து லிட்டர் கொடு

10. நீட்டலளவைப் பெயர்

உடுப்பது நான்கு முழம், ஐந்து மீட்டர் வாங்கினான்

11. சொல்லாகு பெயர்

உரை செய்தான்

12. தானியாகு பெயர்

விளக்கு முரிந்தது.

13. கருவியாகு பெயர்

இந்நூல் அணி

14. கருத்தாவாகு பெயர்

சேக்கிழார் கற்றேன்

மேலும் விடாதவாகு பெயர், விட்ட வாகுபெயர், இருமடியாகுபெயர், மும்மடியாகு பெயர், அடையடுத்த ஆகுபெயர், இரு பெயரொட்டாகு பெயர் போன்றவற்றை கருதுவர்.

## வேற்றுமை

## வேற்றுமையின் இலக்கணமும் எண்ணிக்கையும்

**291. ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப் பொருள்**
**வேற்றுமை வெய்வன எட்டே வேற்றுமை**

தன்னை ஏற்றுக் கொள்ளும் எல்லா வகைப் பெயர்களும் இறுதியில் நின்று அப்பெயர்களின் பொருளை வேறுபடுத்துவனவாகிய வேற்றுமைகள் எட்டு ஆகும்.

## வேற்றுமைகளின் பெயரும் முறைமையும்

**292. பெயரே ஐ ஆல் கு இன் அதுகண்**
**விளி என்றாகும் அவற்றின் பெயர்முறை**

அவ்வேற்றுமைகளின் பெயரும் முறையும் பின்வருமாறு:
பெயர், ஐ, ஆல், கு, இன், அது, கண், வளி, என்பன.

## எழுவாய் வேற்றுமை மற்ற உருபுகளை எற்றல்

**293. ஆறன் உருபும் ஏற்கும் அவ்வுருபே**

பெயராய் நிற்கும் அவ் எழுவாய் உருபு, ஐ முதலாகிய ஆறு வேற்றுமை உருபுகளையும் ஏற்கும்.

## ஐ முதலிய உருபுகளை ஏற்காத பெயர்கள்

**294. நீயிர் நீவிர் நான் எழுவாய் அலபெறா**

நீயிர், நீவிர், என்னும் முன்னிலைப் பெயர்களும், நான் என்னும் தன்மைப் பெயரும் எழுவாய் அல்லாத பிற வேற்றுமை உருபுகளை ஏலாவாம்.

## முதல் வேற்றுமை

**295. அவற்றுள்**
**எழுவாய் உருபு திரிபுஇல் பெயரே**
**வினை பெயர் வினாக்கொளல் அதன்பய னிலையே**

முன்னர்ச் சொல்லப்பட்ட எட்டு வேற்றுமைகளுள் முதல் வேற்றுமையினது உருபாவது ஐ முதலிய உருபுகளை ஏலாமல் திரிதலில்லாத இயல்பாய் நிற்கிற பெயரேயாகும். வினையையும் பெயரையும் வினாவையும் கொள்ள வருதல் அவ்வுருபினது பொருள் நிலையாம்

(எகா)

பென்னன் வந்தான், அரசன் இவன்

## இரண்டாம் வேற்றுமை

**296. இரண்டா வதன்டஉருபு ஐயோ அதன்பொருள்**
**ஆக்கம் அழித்தல் அடைதல் நீத்தல்**
**ஒத்தல் உடைமை ஆதி ஆகும்**

இரண்டாம் வேற்றுமையில் உருபு 'ஐ' ஒன்றேயாகும் அதனுடைய பொருள்களாவன. ஆக்கப்பட்டு பொருள், அழிக்கபடு பொருள், அடையப்படு பொருள், உடைமைப் பொருள் என்பனவாம். எனவே இரண்டாம், வேற்றுமை செய்யபடு பொருள் வேற்றுமை என்பதாயிற்று.

(எகா)

நாற்காலியைச் செய்தான் - ஆக்கம்
கட்டிடத்தை இடித்தான் - அழித்தல்
இவை போன்ற பிற.

## மூன்றாம் வேற்றுமை

**297. மூன்றா வதன்உருபு ஆல்ஆன் ஓடுஒடு**
**கருவி கருத்தா உடனிகழ்வு அதன் பொருள்**

மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் ஆல், ஆன், ஓடு, ஒடு என்பவனவாம். கருவிப் பொருளும், வினைமுதற் பொருளும், உடன்நிகழ்ச்சிப் பொருளும் அதன் பொருள்களாகும்.

(எகா)

வாளால் வெட்டினான் - ஆல் வாளான் வெட்டினான் - ஆன் ஆசிரியரோடு மணவன் வந்தான் - ஓடு தந்தையொடு மகன் வந்தான் - ஒடு

## நான்காம் வேற்றுமை

**298. நான்கா வதற்குஉருபு ஆகும் குவ்வே**

**கொடைப்பகை நேர்ச்சி தகவுஅது வாதல்**
**பொருட்டு முறை ஆதியின் 'இதற்கு இது' எனல் பொருளே**

நான்காம் வேற்றமையின் உருபு 'கு' ஆகும். அதன் பொருள்கள் கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை முதலிய பொருள்களில் இதற்கு இது என்பதாகும்.
(எகா)

முல்லைக்கு தேர் கொடுத்தான் பாரி – கொடை
பாம்புக்குப் பகை கீரி - பகை

## ஐந்தாம் வேற்றுமை

**299. ஐந்தா வதன்உருபு இல்லும் இன்னும்**
**நீங்கல்ஒப்பு எல்லை ஏதுப் பொருளே**

ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் இல், இன் என்பன இவற்றின் பொருளாவது நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்ற நான்கும்.

(எகா)

ஊரின் நீங்கினான் - நீங்கல், யானையின் பெரிது இக்காளை – ஒப்பு, நெல்லையின் தெற்கு குமரி – ஏது

## ஆறாம் வேற்றமை

**300. ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்**
**பன்மைக்கு அவ்வும் உருபாம் பண்பு உறுப்பு**
**ஒன்றன் கூட்டம் பலவின் ஈட்டம்**
**திரியின் ஆக்கம் ஆம்தற் கிழமையும்**
**பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே**

ஒருமையாகிய வருமொழியையுடைய ஆறாம் வேற்றுமைக்கு அது, ஆது என்பவையும், பன்மையாகிய வருமொழியுடைய ஆறாம் வேற்றுமைக்கு 'அ' என்பதும் உருபுகளாகும்.

(எகா)

சிவனது செம்மை - தற்கிழமை
முருகனது வேல் - பிறிதின் கிழமை

## ஏழாம் வேற்றுமை

**301. ஏழன் உருபுகண் ஆதி ஆகும்**
**பொருள்முதல் ஆறும் ஓரிரு கிழமையின்**
**இடனாய் நிற்றல் இதன்பொருள் என்ப**

(எகா)

மணியின்கண் உள்ளது ஒலி - பொருள்
ஊரின்கண் உள்ளது இல்லம் - இடம்
ஆண்டின்கண் உள்ளது மாதம் - காலம்
கையின் கண் உள்ளது விரல் - சினை
கறுப்பின்கண் உள்ளது அழகு – குணம்
ஆட்டத்தின் கண் உள்ளது அபிநயம் - தொழில்

## கண் முதலிய உருபுகள்

**302. கண்கால் கடைஇடை தலைவாய் திசைவாயின்**
**முன்சார் வலம்இடம் மேல்கீழ் புடைமுதல்**
**பின்பாடு அனைதேம் உழைவழி உழிஉளி**
**உன்அகம் புறம்இல் இடப்பொருள் உருபே**

கண் முதலாக இல் ஈறாகச் செல்லப்பட்ட இருபெத்தெட்டும் இடப்பொருளுக்குரிய ஏழாம் வேற்றுமை உருபுகளாம்.

(எகா)
ஊர்கால் நிவந்த பொதும்பா – கால்
நல்லாரிடைப் புக்கு - இடை
தேர்த்திசை இருந்தான் - திசை

## எட்டாம் வேற்றுமை

**303. எட்டன் உருபே எய்துபெயர் ஈற்றின்**
**திரிபு குன்றல் மிகுதல் இயல்பு அயல்**
**திரிபும் ஆம் பொருள் படர்க்கை யோரைத்**
**தனமுக மாகத் தான்அழைப்பதுவே**

எட்டாம் வேற்றுமையின் உருபுகளான விளியேற்கும் பெயரின் ஈறு திரிதல், கெடுதல், மிகுதல், இயல்பாதல், ஈற்றயல் எழுத்து திரிதல் என்பன. அவற்றின் பெருளாவது படர்க்கை பெயர்ப் பொருளைத் தனக்கு எதிர்முகமாக அழைத்தலாகும். எனவே விளிக்கப்படு பொருள் எட்டாம் வேற்றுமையின் பொருள் என்பதாயிற்று.

(எகா)

தந்தை - தந்தாய் - ஈறு திரிதல்
அரசன் - அரச - ஈறு குன்றல்
மகன் - மகளே - இயல்பாதல்
மக்கள் - மக்கால் - ஈற்று அயல் திரிதல்

## விளியேற்கும் பெயர்கள்

**304. இடீஉ ஊவோடு ஐஓ னளரல**
**யவ்வீற்று உயர்திணை ஓரஅல் இவற்றொடு**
**ண.்.க்கான் ஆஈறு ஆகும் பொதுப்பெயர்**
**ஞநவொழி அனைத்தீற்று அ.்.றிணை விளிப்பன**

இ, உ, ஊ. ஐ, ஓ என்னும் உயிர்களையும் ன, ள, ர, ல, ய என்னும் மெய்களையும் ஈற்றில் பெற்றுவரும் உயர்திணைப் பெயர்கள். அவற்றுள் ஓ,ர என்னும் இரண்டும் தவிர்த்து மற்றை எட்டெழுத்துக்களுடன் ண, ஆ என்னும் இரண்டும் சேரப் பத்து எழுத்துகளையும் ஈற்றில் உடைய இருதிணைப் பொதுப் பெயர்கள். மொழிக்கு ஈற்றில் வரும் என்று சொல்லப்பட்ட இருபத்துநான்கு எழுத்துக்களுக்குள் ஞ, ந அல்லாத மற்றைப் பத்தொன்பது எழுத்துகளையும் ஈற்றில் உடைய அ.்.றிணைப் பெயர்கள் ஆகியவை விளிஏற்கும் பெயர்களாம்.

(எகா)

உயர்திணை பெயர்கள்

நம்பி, வேந்து விடலை

இருதிணைப் பொதுப்பெயர்கள்

சாத்தி, கூற்று, தந்தை சாத்தன்

அ.்.றிணைப் பெயர்கள்

மக, புறா, கிளி, தீ

## பொதுவாகிய விளிஉருபு

**305. இம்முப் பெயர்க்கண் இயல்பும் ஏயும்**
**இகர நீட்சியும் உருபாம் மன்னே**

முன் நூற்பாவில் விளிக்கப்படும் என்ற மூவகைப் பெயர்களிடத்தில்(உயர்திணை,பொது,அ.்.றிணை) இயல்பாதல் 'ஏ' மிகுதல் இ, ஈ ஆதல் என்னும் இவை பெரும்பாலும் விளியுருபுகளாக வரும்.

(எகா)

உயர்திணை பெயர்கள்

கூனி, கூறாய், மாந்தர்

பொதுப் பெயர்கள்

அன்னை கூறாய், ஆண் கூறாய்

அ.்.றிணை பெயர்கள்

மான் கொடியாய், கிளி நல்லாய்

## விளி உருபிற்குச் சிறப்பு விதி

**306. ஐஇறு பொதுப்பெயர்க்கு ஆயும் ஆவும்**
**உருபு ஆம் அல்லவற்று ஆயும் ஆகும்**

ஐகாரத்தை இறுதியாக உடைய பொதுப்பெயர்கள் ‘ஆய்’ ஆகவும் ‘ஆ’ ஆகவும் திரிதலும் உருபுகளாம்.

(எகா)

அன்னை, அம்மா – பொதுப் பெயர்
விடலை, நாராய் - உயர்திணைப் பெயர்

## னகர ஈற்று உயர்திணைப் பெயர்களின் விளியுருபு

**307. ஒருசார் னவ்வீற்று உயர்திணைப் பெயர்க்கண்**
**அளபுஈறு அழிவயல் நீட்சி அதனோடு**
**ஈறு போதல் அவற்றோடு ஓவுறல்**
**ஈறழிந்து ஓவுறல் இறுதியவ் வாதல்**
**அதனோடு அயல்திரிந்து ஏஉறல் ஈறழிந்து**
**அயலே ஆதலும் விளியுருப்பு ஆகும்**

னகர வீற்று உயர்திணைப் பெயர்களுள் சில பொதுவிதியால் வருதலேயன்றி அளபெடுத்தலும், இறுதி கெடுதலும், ஈற்றயல் நீளுதலும், ஈற்றயல் நீண்டு ஈறு கெட்டு ஈற்றயல் நீண்டு அவற்றோடு ஒகாரம் யகரமெய்யாகத் திரிதலும், ஈறுகெட்டு, ஒகாரம் மிகுதலும் னகர மெய் யகரமெய்யாகத் திரிதலும், ஈற்று னகர மெய் யகர மெய்யாகத்திரிந்து அதன் அயலில் நின்ற ஆகாரம் ஒகாரமாகிய ஏகாரம் மிகுதலும், ஈறுகெட்டு அயலில் நின்ற அகரம் ஏகாரம் ஆதலும் விளியுருபுகளாம்.

(எகா)

சேக்கிழான் - சேக்கிழாஅன் - அளபெடுத்தது
புலவன் - புலவ - ஈறு அழிந்தது
பெருமன் - பெருமான் - ஈறு நீண்டது
மன்னன் - மன்னா - ஈற்றயல் நீண்டது

## ளகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளியிருபு

**308. ள∴கான் உயர்பெயர்க்கு அறபுஈறு அழிவு அயல்**
**நீட்சி இறுதி யவ்வொற்று ஆதல்**

**அயலில் அகரம்ஏ ஆதலும் விளித்தனு**

ளகர வீற்று உயர்திணைப் பெயர்களுள் சில பொதுவிதியால் வருதலேயன்றி அளபெடுத்தலும், ஈறு கெடுதலும் ஈற்றயல் நீளுதலும், ஈற்று ளகர மெய் யகரமாதலும், ஈற்றயல் அகரம் ஏகாரமாதலும் விளியுருபுகளாகும்.

(எகா)

வேள் - வேஎள் - அளபெடுத்தது
எல்லாள் - எல்லா - ஈறு அழிந்தது
மக்கள் - மக்காள் - ஈறு நீண்டது
குழையாள் - குழையாய் - ளவ் வொற்று யவ்வொற்றாயிற்று
அடிகள் - அடிகேள் - ஈற்றயலகரம் ஏகாரமாயிற்று

## ரகர ஈற்று உயர்திணைப் பெயர்களின் விளியிருபு

**309. ரவிவீற்று உயர்பெயர்க்கு அளபுஎழல், ஈற்றயல்**
**அகரம் இஈஆதல், ஆண்டைஆ**
**ஈஆதல், அதனோடு ஏஉறல், ஈற்றுஏ**
**மிக்கு அயல் யாக்கெட்டு அதன் அயல் நீடல்**
**ஈற்றின் ஈஉறல் இவையும்ஈண்டு உருபே**

பொதுவிதியின்றி ரகர ஈற்று உயர்திணை பெயர்களுள் சில அளபெடுக்கும் சில ஈற்றயல் அகரம், இகரமாகவும் ஈகாரமாகவும் திரியும். சில ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாகும் சில அதனுடன் ஏகாரமேற்றும். சில ஈற்றில் ஏகாரம் மிகுந்த 'யா' கெட்டு அதன் அயல் இகரம் ஈகாரமாகும். சில ஈற்றில் ஈர் ஆகும்.

(எகா)

சிற்றார் - சிறாஅர், வணிகர்- வணிகீர்,

## லகர யகர ஈற்று உயர்திணைப் பெயர்களின் விளியுருபு

**310. லகாரஈற்று உயர்பெயர்க்கு அளபுஅயல் நீட்சியும்**
**யகார ஈற்றிற்கு அளபுமாம் உருபே**

பொதுவிதியன்றி, லகர மெய்யீற்று உயர்திணைப் பெயர்களுள் சில அளபெடுக்கும். சில ஈற்றயல் நீளும். யகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் அளபெடுக்கும், இவை விளியுருபுகளாம்

(எகா)

மால் - மாஅல் - அளபெடுத்தது
மடவால் - மடவரால் - ஈற்றயல் நீண்டது
சேய் - சேஎய் - யகரவீறு அளபெடுத்தது

## னகர ஈற்று அஃறிணைப் பெயர், பொதுப்பெயர்களின் விளியுருபு

**311. னவ்வீற்று உயர்திணை அல்இரு பெயர்க்கண்**
**இறுதி அழிவுஅத னோடுஅயல் நீட்சி**

னகர மெய்யீற்று உயர்திணைப் பெயர் அல்லாத அ∴றிணைப் பெயர்களுள் சிலவும், பொதுப் பெயர்களுள் சிலவும் பொதுவிதியால் பெறுமற்றோடு அவற்றின் ஈறு கெடுதலும், ஈறு கெட்டு ஈற்றயல் நீளுதலும் விளியுருபுகளாம்.

(எகா)

அ∴றிணைப் பெயர்கள்

அவலன் - அலவ, அலவன் - அலவா

பொதுப் பெயர்கள்

சாத்தன் - சாத்த, சாத்தன் - சாத்தா

## லகர, ளகர ஈற்று அ∴றிணைப் பெயர், பொதுப் பெயர்களின் விளியுருபு

**312. லளஈற்று அ∴றிணைப் பெயர்பொதுப் பெயர்க்கண்**
**ஈற்று அயல் நீட்சியும் உருபுஆ கும்மே**

லகர, ளகர மெய்யீற்று அ∴றிணைப் பெயர்களுள்ளும் பொதுப் பெயர்களுள்ளும் சில பொதுவிதியேயன்றி, ஈற்றயல் எழுத்து நீளுதலும் விளியுருபாம்.

(எகா)

அ∴றிணைப் பெயர்

முயல் -முயால்

பொதுப் பெயர்

தூங்கல் - தூங்கால்

## விளி உருபுகளுக்குப் புறனடை

**313. அண்மையின் இயல்பும், ஈறு அழிவும் சேய்மையின்**
**அளபும் புலம்பின் ஓவும் ஆகும்.**

முன்சொல்லப்பட்ட விளி உருபுகளுள் அண்மை விளிக்கு இயல்பும் ஈறுகெடுதலும் உருபாக வரும். சேய்மை விளிக்கண் அளபெடுத்தலும், புலம்பலுக்கு ஒகாரம் மிகுதலும் விளியுருபாக வரும்.

(எகா)

தன்மை அரச -அண்மை விளி
மாஅல் சிறாஅர் - சேய்மை விளி
அய்யோவோ -புலம்பல் விளி

## விளியுருபு ஏலாப் பெயர்கள்

**314. நுவ்வொடு வினாச்சுட்டு உற்ற னளர**
**வைத்துத், தாம், தான், இன்னன விளியா**

நுவ்வுடன் எ, ஏ, யா என்னும் மூன்று முதல் வினா எழுத்துக்களையும், அ, இ, உ என்னும் மூன்று ஈற்று உயர்திணை முப்பாற் பெயர்களும், வை, து, என்னும் இரண்டு ஈற்று அ.்.றிணை இருபாற் பெயர்களும், தாம், தான், என்னும் பொதுப் பெயர்களும் இவை போல்வன பிறவும் விளி ஏலாப் பெயர்களாம்.

(எகா)

நுமன், எவன், அவன், இவன், உவன், தாம், தான்

## வேற்றுமைகளுக்குப் புறனடை முதல் சினைப் பொருள்களுக்கு உருபுகள்

**315. முதலை ஐயுறின் சினையைக் கண்உறும்**
**அதுமுதுற் காயின் சினைக்குஐ ஆகும்**

முதலையும் சினையும் சேர்த்து கூறுமிடத்து முதற்பெயரை ‘ஐ’யுருபு பொருத்தினால், சினைப் பெயரைக் ‘கண்’ணுருபு பொருந்தும். முதற்பெயருக்கு ‘அது’ உருபு வந்தால், சினைப் பெயரோடு ‘ஐ’ உருபு வரும்.

(எகா)

யானையைக் காலின்கண் வெட்டினான்

## முதல் சினைகளுக்கும், பிண்டப் பொருளுக்கும் புறனடை

**316. முதலியவை சினைஇவை எனவேறு உளஇல**
**உரைப்போர் குறிப்பின அற்றே பிண்டமும்**

முதற் பொருள்கள் இவை சினைப் பொருள்கள் இவை எனக் கூறுவதற்கு அவை வெவ்வேறு இல்லை சொல்லுவோனது குறிப்பாலேயே அவை வேறுபட்டன.

(எகா)

குப்பையைத் தலையின் கண் சிதறினான்

## உருபு மயக்கம்

**317. யாதன் உருபின் கூறிற்று ஆயினும்**
**பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்**

ஒரு வேற்றுமைப் பொருள் மற்றொரு வேற்றுமை உருபால் சொல்லப்பட்டதாயினும் அப்பொருள் சென்ற வழியே அவ்வுருபு சேரும்.

(எகா)

காலத்தினால் செய்த நன்றி

## சில வேற்றமை உருபுகள் செய்யுளிடத்து திரிந்து வருதல்

**318. ஐஆன்கு செய்யுட்கு அவ்வும் ஆகும்**
**ஆகா அ∴றினைக்கு ஆன் அல் லாதன**

ஐ, ஆன், கு என்னும் மூன்று உருபுகளும் செய்யுளில் அகரமாகித் திரிந்தும் வரும். அ∴றிணையில் ஆன் உருபு தவிர மற்ற இரண்டும் அகரமாகத் திரியா. எனவே மூன்று உருபுகளும் உயர்திணையில் செய்யுளின்கண் திரியும்.

(எகா)

காவலோனக் களிஞ்குமே

## எட்டு வேற்றுமைக்கும் முடிக்கும் சொல்

**319. எல்லை இன்னும் அதுவும் பெயர் கொளும்**
**அல்ல வினை கொளும் நான்கு ஏழ் இருமையும்**
**புல்லும் பெரும்பாலும் என்மனார் புலவர்**

எல்லைப் பொருளில் வரும் ‘இன்’ என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபும், ‘அது’ என்னும் ஆறாம் வேற்றுமை உருபும், பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும். பிற எழுவாய் முதலிய வேற்றுமைகள் எல்லாம்வினைச் சொல்லைக் கொண்டு முடியும். நான்காம் வேற்றுமையும், ஏழாம் வேற்றுமையும் பெரும்பாலும் வினையைக் கொண்டு முடிதலே அன்றி, வினையொடு பொருந்தும் பெயரையும் கொண்டு முடியும்.

(எகா)

மதுரையின் கிழக்கு, கந்தன் வந்தான், கண்ணனுக்கு கொடுத்தான், பிணிக்கு மருந்து.

## பெயரியல் முற்றிற்று.

## 2. வினையியல்

வினைச் செற்களின் இலக்கணம் உணாத்துவது.

### தெரிநிலை வினைச்சொல்லின் பொதுவிலக்கணம்

**320. செய்பவன் கருவி நிலம்செயல் காலம்**
**செய்பொருள் ஆறும் தருவது வினையே**

கருத்தாகவும், கருவியாகவும், இடமும், செயலும், காலமும், செயப்படுபொருளும் ஆகிய அறுவகைப் பொருளையும் தருவது தெரிநிலை வினைச்சொல்லாகும்.

(எகா)

திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்

### குறிப்பு வினைச் சொல்லின் இலக்கணம்

**321. பெருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்**
**வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே**

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், என்னும் ஆறையும் அடிப்படையாகக் கொண்டு பிறந்தது முன் நூற்பாவில் சொல்லப்பட்ட ஆறனுள் கருத்தா ஒன்றையே விளக்கி நிற்றல் குறிப்பு வினைச் சொல்லின் இலக்கணமாகும்

(எகா)

பொருள் - பொன்னான்
இடம் - மதுரையான்
காலம் - ஆதிரையான்
சினை - கண்ணன்
குணம் - கரியன்
தொழில் - நடையன்

### வினைச் சொற்களின் பாகுபாடு

**322. அவைதாம்**
**முற்றும் பெயர்வினை எச்சமும் ஆகி**
**ஒன்றற்கு உரியவும் பொதுவும் ஆகும்**

முன்னர் இருநூற்பாக்களில் சொல்லப்பட்ட தெரிநிலை வினைச் சொற்களும், குறிப்பு வினைச் சொற்களும், வினைமுற்று, பெயரச்சம், வினையெச்சம் என்ற மூன்று வகையான திணை, பால், இடங்களுள் ஒன்றிற்குச் சிறப்பாகவும் பலவற்றிற்குப் பொதுவாகவும் வரும்.

## வினைமுற்றின் இலக்கணம்

**323. பொதுஇயல்பு ஆறையும் தோன்றிப் பொருட்பெயர்**
**முதல்அறு பெயர்அலது ஏற்பில முற்றே**

வினைச் சொற்களுக்குரிய பொது இலக்கணம் செய்பவன் முதலிய ஆறு இயல்புகளையும் தோன்றச் செய்து பொருட் பெயர் முதலிய அறுவகைப் பெயரையும் பயனிலையாக ஏற்று மற்றொன்றையும் ஏலாதன தெரிநிலை, குறிப்பு வினை முற்றுகளாகும்.

(எகா)

வந்தான் அவன் - தெரிநிலை
நல்லன் அவன் - குறிப்பு

## தெரிநிலை வினைமுற்றின் பாகுபாடு

**324. ஒருவன்முதல் ஐந்தையும் படர்க்கை இடத்தும்**
**ஒருமை பன்மையைத் தன்மை முன்னிலையிலும்**
**முக்கா லத்தினும் முரண முறையே**
**மூவைந்து இருமூன்று ஆறாய் முற்று**
**வினைப்பதம் ஒன்றே மூஒன் பானாம்**

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய ஐம்பால் வினைமுற்றுக்களைப் படர்கையிடத்திலும் ஒருமை, பன்மை, வினைமுற்றுக்களைத் தன்மை, முன்னிலை, படர்க்கை இடங்களிலும் வைத்து முக்காலங்களிலும் கணக்கிட்டால் படர்க்கை வினைமுற்றுகள் பதினைந்து ஆகும். தன்மை வினை முற்றுகள் ஆறு ஆகும், முன்னிலை வினைமுற்றுகள் ஆறு ஆகும். ஆகத் தெரிநிலை வினைமுற்றுச் சொற்கள் இருபத்தேழாகும்.

(எகா)

நடந்தான், நடந்தாள் - படர்க்கை வினைமுற்று
நடந்தேன், நடந்தோம் - தன்மை வினைமுற்று
நடந்தாய், நடந்தீர் - முன்னிலை வினைமுற்று

## ஆண்பால் படர்க்கை வினைமுற்று

**325. அன்ஆன் இறுமொழி ஆண்பால் படர்க்கை**

அன், ஆன் என்னும் இரு விகுதிகளையும் ஈற்றில் பெற்றுவரும் வினைச்சொற்கள், உயர்திணை ஆண்பாற் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றுமாகும்.

(எகா)

ஓடினன் - அன்
ஓடினான் - ஆன்

## பலர்பால் படர்க்கை வினைமுற்று

**326. அள் ஆள் இருமொழி பெண்பால் படர்க்கை**

(எகா)

படித்தனள் - அள்
படித்தாள் - ஆள்

## பலர்பால் படர்க்கை வினைமுற்று

**327. அர்ஆர் பவ்வூர் அகரமார் ஈற்ற
பல்லோர் படர்க்கைமார் வினையோடு முடிமே**

அர், ஆர், ப, மார் என்னும் நான்கு விகுதிகளையும் இறுதியிலுடைய சொற்கள் உயர்திணை பலர்பாற் படர்க்கை வினைமுற்றும், குறிப்பு முற்றுமாம். இவற்றுள் மார் ஈற்று வினைமுற்று, பெயருடன் முடிவதேயன்றி வினையுடன் முடியும்.

(எகா)

வந்தனர் - அர்
வந்தார் - ஆர்
வருப - ப
கொண்மார் - மார்

## ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று

**328. துறுடுக் குற்றிய லுகர ஈற்ற
ஒன்றன் படர்கைடுக் குறிப்பின் ஆகும்**

து, று, டு என்னும் மூன்று விகுதிகளையும் இறுதியில் உடைய குற்றியலுகரம் ஈற்று மொழிகள் அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்றும், குறிப்பும் முற்றுமாம். இவற்றுள் டு விகுதி குறிப்பு வினைமுற்றில் மட்டுமே வரும். தெரிநிலை வினைமுற்றில் வராது.

(எகா)

சென்றது – து
போயிற்று – று
உண்டு – டு

## பலவின்பால் படர்க்கை வினைமுற்று

**329. அஆ ஈற்ற பலவின் படர்க்கை**
**ஆவே எதிர்மறைக் கண்ண தாகும்**

அ, ஆ என்னும் இரு விகுதிகளையும் ஈற்றில் உடைய மொழிகள் அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை வினைமுற்றும், குறிப்பு வினைமுற்றுமாம். ஆகார விகுதி எதிர்மறையில் மட்டுமே வரும். உடன்பாடடில் வாராது.

(எகா)

வந்தன – அ
நடவா - ஆ

## இருதினைப் பொதுவினை

**330. தன்மை முன்னிலை வியங்கோள் வேறுஇலை**
**உண்டுஈர் எச்சம் இருவிணைப் பொதுவினை**

தன்மை வினைமுற்றுகளும், முன்னிலை வினைமுற்றுகளும், வியங்கோள் வினைமுற்றுகளும், வேறு இல்லை உண்டு என்னும் மூன்று குறிப்பு வினைமுற்றுகளும், தெரிநிலையும் குறிப்புமாகிய பெயரச்ச வினை எச்சங்களும் உயர்திணை, அஃறிணை என்னும் இரு திணைக்கும் பொது வினைகளாம்.

## தன்மை ஒருமை வினைமுற்று

**331. குடுதுறு என்னும் குன்றிய லுகரமோடு**
**அல்அன் என்ஏன் ஆகும் ஈற்ற**
**இருதிணை முக்கூற்று ஒருமைத் தன்மை**

கு, டு, து, று என்னும் நான்கு குற்றியலுகர விகுதிகளும், அல், அன், என், ஏன், என்னும் நான்கு மெய்யீற்று விகுதிகளும் ஆகிய இவ்வெட்டு விகுதிகளையும் இறுதியில் பெற்று வரும் சொற்கள், இருதிணைகட்கும் உரிய ஒருவன், ஒருத்தி ஒன்று என்னும் மூன்று பால்களுக்கும் பொதுவாகிய தன்மை ஒருமை வினைமுற்றும் குறிப்பு முற்றுமாம்.

(எகா)

உண்கு – கு
உண்டு – டு
வந்து - து
சென்று – று
செய்வல் - அல்

## தன்மைப் பன்மை வினைமுற்று

**332. அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்**
**எம்ஏம் ஓம்இவை படர்க்கை யாரையும்**
**உ ம்ஊர் கடதற இருபாலரையும்**
**தன்னோடு படுக்கும் தன்மைப் பன்மை**

அம், ஆம் என்னும் இவ்விரு விகுதிகளையும் இறுதியில் பெற்றுவரும் சொற்கள் முன்னிலை இடத்தாரையும், எம், ஏம், ஓம் என்னும் விகுதிகளை இருதியில் பெற்றுவரும் சொற்கள் படர்க்கை இடத்தாரையும். கும், டும், தும், றும் என்னும் இன்னான்கு விதியையும் இறுதியில் கொண்டுள்ள சொற்கள் முன்னிலை, படர்க்கை என்னும் ஈரிடத்தார்களையும் தன்னுடன் கூட்டும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்றும், குறிப்பு முற்றும் ஆகும்.

(எகா)

உண்டனம் - அம்
உண்டாம் - ஆம்
உண்டனெம் - எம்
உண்டேம் - ஏம்
உண்டோம் - ஓம்
உண்கும் - கும்
வந்தும் - தும்
சென்றும் - றும்

## வினையுடனும் முடியும் தன்மை வினைமுற்றுக்கள்

**333. செய்குஎன் ஒருமையும் செய்கும்என் பன்மையும்**
**வினையொடு முடியுனும் விளம்பிய முற்றே**

'செய்கு' என்னும் வாய்பாட்டுத் தன்மை ஒருமை வினைமுற்றும், 'செய்கும்' வாய்ப்பாட்டு தன்மைப் பன்மை வினைமுற்றும் பெயருடன் முடிதலே அல்லாமல், வினையோடு முடிந்தாலும் அவை முன்பு சொல்லப்பட்ட வினை முற்றுக்களேயாகும்.

(எகா)

காண்கு வந்தேன், காண்கு யான்.

## உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்று

**334. முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை**

தன்மையோடு கூடிய முன்னிலை, படர்க்கைகள் தன்மையானாற்போல, முன்னிலையோடு கூடிய படர்க்கைகள் முன்னிலையாம்.

## முன்னிலை ஒருமை வினைமுற்று

**335. ஐஆய் இகர ஈற்ற மூன்றும்**

**ஏவலின் வரூஉம் எல்லா ஈற்றவும்**
**முப்பால் ஒருமை முன்னிலை மொழியே**

ஐ, ஆய், இ என்னும் மூன்று விகுதிகளை இறுதியில் உடைய வினை முற்றுகளும் ஏவற் பொருளில் வரும். இருபத்து மூன்று ஈற்று ஏவல்கலும் ஆண்பால், பெண்பால் ஒன்றன்பால் என்னும் மூன்று பால்களுக்கும் பொதுவாகிய முன்னிலையொருமை தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு முற்றும் ஆகும்.

(எகா)

நடந்தனை – ஐ
நடந்தாய் - ஆய்
உண்டி - இ

## ஏவல் வினைமுற்றுக்குச் சிறப்புவிதி

**336. முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்**
**அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே**

முன்னிலை ஏவல் வினைமுற்றிற்கு முன் ஈகாரமும், ஏகாரமும் அவ்விடத்து நிற்றற்குரிய தண்மையையுடைய ஆனும் ஒரு மெய்யின் மேல் ஏறிவரும்.

(எகா)

சென்றீ பெருமநிற்கைக்குநர் யாரோ

## முன்னிலை பன்மை வினைமுற்று

**337. இர்ஈர் ஈற்ற இரண்டும் இருதிணைப்**
**பன்மை முன்னிலை மின் அவற்று ஏவல்**

இர், ஈர் என்னும் இரண்டும் விகுதிகளையும் இருதியிலுடைய மொழிகள் இருதிணைகளுக்கும், பொதுவாகிய முன்னிலைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்றும், குறிப்பு முற்றும் ஆகும்.
மின் விகுதியை இறுதியில் உடைய மொழிகள் முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்றாம்.

(எகா)

உண்டனிர் - இர்
உண்டீர் - ஈர்

## வியங்கோள் வினைமுற்று

**338. கயவொடு ரவ்வெற்று ஈற்ற வியங்கோள்**
**இயலும் இடம்பால் எங்கும் என்ப**

க, ய என்னும் இரண்டு உயிர் மெய்களையும், ரகர ஒற்றையும் இறுதியாக உடைய மொழிகள் வியங்கோள் வினைமுற்றுகள் ஆகும். அவை மூன்று இடங்களிலும், ஐம் பாலிலும் வரும்.

(எகா)

வாழ்க, வாழிய, வாழியர்

## ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவாகிய குறிப்பு வினைமுற்று

**339. வேறுஇல்லை உண்டுஐம் பால்மூ விடத்தன**

வேறு, இல்லை, உண்டு என்னும் குறிப்பு வினைமுற்றுகளும், ஐம்பாலுகளுக்கும் மூன்று இடங்களுக்கும் உரியன.

(எகா)

யான் - வேறு
அவள் - இல்லை
உண்டு – அவை

## பெயரெச்சம்

**340. செய்த செய்கின்ற செய்யும் என்பாட்டில்**
**காலமும் செயலும் தோன்றிப் பாலொடு**
**செய்வ தாதி அறுகொருள் பெயரும்**
**எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே**

செய்த, செய்கின்ற, செய்யும் என்ற சொல்லப்படுகின்ற மூன்று வகை வாய்பாட்டுச் சொற்களில் காலங்களும், தொழில்களும் தோன்றப்பெற்றுப் பாலுடன் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் என்னும் அறுவகைப் பொருட்பெயர்களும் எஞ்சும்படி நிற்பன தெரிநிலைப் பெயரெச்சமும், குறிப்புப் பெயரெச்சமும் ஆகும்.

(எகா)

தெரிநிலைப் பெயரெச்சம்

உண்ட, உண்கின்ற, உண்ணும்

## செய்யும் எனனும் எச்சத்திற்கு சிறப்பு விதி

**341. செய்யும்எம் எச்சவீற்று உயிரிமெய் சேறலும்**

**செய்யுளள் உம்உந்து ஆகலும் முற்றேல்**
**உயிரும் உயிர்மெய்யு ஏகலும் உளவே**

செய்யுள் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சத்தினுடைய இறுதியிலுள்ள உயிர்மெய் கெடுதலும், செய்யுளில் உம் விதிக்கு உந்து எனத் திரிதலும், செய்யும் என்னும் முற்றாயின் அதன் இறுதியில் உள்ள உயிராயினும், உயிர் மெய்யாயினும் கெடுதலும் உண்டு.

(எகா)

ஆம் பொருள், போம் போது, தாமரை

## வினையெச்சம்

342. **தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை**
**ஒழிய நிற்பது வினையெச் சம்மே**

தொழிலும் காலமும் வெளிப்படையாகத் தோன்றிப் பாலும் வினையும் எஞ்ச நிற்பன தெரிநிலை வினையெச்சமும், குறிப்பு வினையெச்சமும் ஆகும்.

(எகா)

நடந்து போனான், அருளின்றிச் செய்தான்

## வினையெச்ச வாய்பாடுகள்

343. **செய்து செய்பு செய்யாச் செய்யூச்**
**செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்**
**வான்பான் பாக்குஇன வினையெச் சம்பிற**
**ஐந்தொன்று ஆறுமுக் காலமும் முறைதரும்**

செய்து, செய்யு, செய்யா, செய்யூ, செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் என்னும் ஒன்பது வாய்ப்பாட்டால் வருவனவும். வான், பான், பாக்கு என்னும் மூன்று விதிகளைக் கொண்டு வருவனவும். இவை போல்வன பிறவும் வினையெச்ச வினைகள் ஆகும். முன்னர் உள்ள ஐந்தும் இறந்த காலம் காட்டும். நடு நின்ற ஒன்று நிகழ்காலம் காட்டும். பின்னைய ஆறும் எதிர்காலம் காட்டும்.

(எகா)

நடந்து வந்தான் - இறந்த காலம்
நடக்க வல்லான் - நிகழ்காலம்
வேண்டின் நல்குவர் - எதிர்காலம்

## வினையெச்சங்களின் முடிபு வேறுபாடு

344. **அவற்றுள்,**
**முதலில் நான்கும் ஈற்றின் மூன்றும்**

**வினைமுதல் கொள்ளும். பிறவும்ஏற் கும்பிற**

முன் நூற்பாவில் சொல்லிய பன்னிரண்டு வாய்ப்பாட்டு வினையெச்சங்களில் முதலில் உள்ள செய்து, செய்பு, செய்யா, செய்யூ என்னும் நான்கும், இறுதியில் உள்ள வான், பான், பாக்கு என்னும் மூன்றும் வினைமுதல் வினையைக் கொண்டு முடியும். நடுவில் உள்ள செய்தென செய, செயின், செய்யிய, செய்யியர் என்னும் ஐந்தும், இவை போல்வன பிறவும் செய்பவனைக் கொண்டு முடியும்.

(எகா)

இராமன் நடந்து வந்தான், புலி கொல்வான் சென்றது

## வினைமுதல் கொள்ளும் என்பனவற்றிற்கு ஒரு புறனடை

**345. சினைவினை சினையொடும் முதலொடும் செறியும்**

முதலில் நான்கும் ஈற்றில் மூன்றும் என்ற வினையெச்சங்கள் உறுப்பின் வினையாயின், அவை சினையோடு முடியதலேயன்றி ஒற்றுமை நயம் பற்றி முதலுடனும் முடியும்.

(எகா)

கால் ஒடிந்து விழுந்தது

சாத்தான் கால் ஒடிந்து விழுந்தான்

## வினையெச்ச வாய்பாடுகள் திரிதல்

**346. சொல்திரி யினும்பொருள் திரியா வினைக்குறை**

முதலில் நான்கும், ஈற்றில் மூன்றும் என்ற வினை எச்ச வாய்பாடுகளாகப் பிற வினைஎச்ச வாய்பாடுகள் வேறுபடினும், அவற்றின் பொருள்கள் வேறுபடாவாம்.

(எகா)

மழை பெய்து நெல் விளைந்தது, கொழுநன் தொழுது எழுவான்.

## ஒழிபு குறிப்புவினைக்குப் புறனடை

**347. ஆக்க வினைக்குறிப்பு ஆக்கம்இன்று இயலா**

ஆக்கத்தால் வரும் குறிப்புவினைச் சொற்கள், முடியுங்கால் ஆக்கச் சொற்களைப் பெற்றே முடியும்.

(எகா)

கல்வியால் பெரியவன் ஆயினான்

கண்ணன் நல்லவன்

## ‘செய்யும்’ என்னும் முற்றிற்குச் சிறப்பு விதி

**348. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே**

செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்றானது உயர்திணைப் படர்க்கைப் பலர் பாலிலும், முன்னிலையிலும், தன்மையிலும் வராது.

(எகா)

அவன் உண்ணும், அது உண்ணும், அவை உண்ணும்

## ‘யார்’என்னும் வினாக்குறிப்பு வினை முற்றிற்குச் சிறப்பு விதி

**349. யார்என் வினாவினைக் குறிப்புஉயர் முப்பால்**

‘யார்’ என்னும் வினாப் பொருளைத்தரும் குறிப்புவினை முற்று உயர்திணை முப்பால்களுக்கும் உரிய பொதுவினை யாகும்.

(எகா)

அவன் யார், நான் யார், நாம் யார்.

## இருவகை முற்றிற்கும் புறனடை

**350. வினைமுற்றே வினை யெயச்சம் ஆகலும்
குறிப்பு முற்று ஈர் எச்சம் ஆகலும் உளவே**

தெரிநிலை வினைமுற்று எச்சமாகி வருதலும், குறிப்பு வினைமுற்று வினையெச்சமாகியும் பெயரெச்சமாகியும் வருதலும் உண்டு.

(எகா)

அஃது எவன், அவை எவன்

## இருவகை முற்றிற்கும் புறனடை

**351. வினைமுற்றே வினை யெச்சம் ஆகலும்
குறிப்புமுற்று ஈர்எச்சம் ஆகலும் உளவே**

தெரிநிலை வினைமுற்று வினையெச்சமாகி வருதலும், குறிப்பு வினைமுற்று வினையெச்சமாகியும், பெயரெச்சமாகியும் வருதலும் உண்டு.

(எகா)

விழுந்தனன் வணங்கினான் - விழுந்து வணங்கினான்

## 3. பொதுவியல்

இது முன்னர் சொல்லப்பட்ட பெயர், வினை சொற்களுக்கும், பின்னர் சொல்லப்படும் இடை, உரிச்சொற்களுக்கும் பொதுவான இலக்கணங்களைச் கூறுவது.

### பால் பொதுமை நீங்கும் நெறி

**352. இருதிணை ஆண்பெணுள் ஒன்றனை ஒழிக்கும்**
**பெயரும் வினையும் குறிப்பி னானே**

இருதிணையிலும் ஆண்பால் பெண்பால்களுக்கும் பொதுவாகிய பெயர்ச் சொற்களும், அத்தகைய வினைச் சொற்களும் அவ்வாண்பால் பெண்பால்களுள் ஒருபாலைக் குறிப்பினால் நீக்கும்.

(எகா)

ஐயப்பன் பக்தர் தாடி வளர்த்தனர், இரண்டுகோழிகள் கூவின.

### பெயர்வினையிடத்துச் செய்யுளில் ஈற்றயல் திரிதல்

**353. பெயர் வினையிடத்து னளரய ஈற்றயல்**
**ஆஓ ஆகலும் செய்யுளுள் உரித்தே**

பெயரிடத்தும், வினையிடத்தும் ன, ள, ர, ய இவற்றின் ஈற்றிற்கு அயலிலுள்ள விகுதி முதல் ஆகாரம், ஓகாரமாகத் திரிதல் செய்யுளிடத்து உரியதாகும்.

(எகா)

வில்லோன் காலன கழலே

### உருபும் வினை ஈறும் எதிர் மறையினும் திரியாமை

**354. உருபும் வினையு எதிர்மறுத் துரைப்பினும்**
**திரியா தத்தமீற் றுருபி னென்ப**

(எகா)

எட்டு வேற்றுமை உருபுகளும், மூவகை வினைச் சொற்களும், எதிர்மறையாகச் சொல்லுமிடத்தும், தத்தமது ஈற்றின்றும், அவ்உருபினின்றும் வேறுபடா என்று செல்லுவர்.

(எகா)

குமரன் வாரான், குடத்தை வனையான்

## உருபும் வினையும் அடுக்கி வரல்

**355. உருபுபல அடுக்கினும் வினைவேறு அடுக்கினும்**
**ஒருதம் எச்சம் ஈறுற முடியும்**

வேற்றுமை உருபுகள் விரிந்தும், தொக்கும் தம்முன் விரவியோ, வெவ்வேறான பல அடுக்கி வரினும் மூவகை வினைச் சொற்களும் வெவ்றே பல அடுக்கி வரினும். தாம்,தாம் கொண்டு முடியும் ஒரு சொல் இறுதியில் வர, அதனோடு அனைத்தும் முடியும்.

(எ.கா)

ஆசிரியர் மாணவனைக் கேள்வியால் துளைத்து எடுத்தார்

## இடைப் பிறவரல்

**356. உருபுமுற்றுஈ ரெச்சம் கொள்ளும்**
**பெயர்வினை இடைப்பிற வரலுமாம் ஏற்பன**

எட்டு வேற்றுமை உருபுகளும், வினை முற்றுக்களும், பெயரெச்சங்களும், வினை எச்சங்களும் ஆகிய இவற்றிற்கும். இவை கொண்டு முடிகிற பெயர்ச் சொற்களுக்கும் வினைச்சொற்களுக்கும் இடையில் பொருத்தமான வேறு சொற்களும் வருதலும் உண்டு.

(எகா)

வேலன் உண்டான், வந்தான் கணவன், வந்த காதலன், வந்து போயினான்

## முடிக்கும் சொல் நிற்குமிடம்

**357. எச்சப் பெயர்வினை எய்தும் ஈற்றினும்**

உருபுகளும், முற்றுகளும், பெயரெச்சங்களும், வினையெச்சங்களும் ஆகிய இவை கொண்டு முடிகின்ற எச்சமாகிய பெயரும் வினையும் அவற்றிற்கு ஈற்றிலும் வரும்.

(எகா)

கண்ணன் வந்தான் - வந்தான் கண்ணன்
மரத்தை வெட்டினான் - வெடடினான் மரத்தை

## ஒருமொழி தன் இனத்தையும் உணர்த்தல்

**358. ஒருமொழி ஒழிதன் இனம் கொளற்கு உரித்தே**

பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களுள் ஒவ்வொன்றும், நின்ற தன் தன் இனங்களைக் கொள்ளுதற்கு உரியதாம்.

(எகா)

சோற்றை உண்டான் என்றால் கறியைத் தின்றான் எனவும்
வெற்றிலையைத் தின்றான் என்றால் பாக்கையும், சுண்ணாம்பையும் தின்றான்.

## திணை, பால், இடப் பொதுமை நீக்கும் முறைமை

**359. பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்**
**மேல்வரும் சிறப்புப் பெயர்வினை தாமே**

திணை, பால், இடங்களுக்குப் பொதுவாகிய பெயர்ச் சொல், வினைச் சொற்களின் பொதுத் தன்மையை அவற்றின் முன்னரும், பின்னரும் வரும் சிறப்புப் பெயர்கள் நீங்கும்.

(எகா)

சாத்தான் இவன், அவர் என் தந்தையார், வாழ்க அவன்-அவள்.

## எச்சங்களின் முடிபு

**360. பெயர்வினை உம்மைசொல் பிரிபுஎன ஒழியிசை**
**எதிர்மறை இசையெனும் சொல்ஒழிபு ஒன்பதும்**
**குறிப்பும் தத்தம் எச்சம் கொள்ளும்**

பெயரெச்சம், வினையெச்சம், உம்மையெச்சம், சொல்லெச்சம், பிரிநிலை எச்சம். என என்னும் எச்சம், ஒழியிசை எச்சம், எதிர்மறை எச்சம், இசை எச்சம் என்னும் ஒன்பது சொல் எச்சங்களும், குறிப்பு எச்சமும் ஆக பத்து எச்சங்களும் தத்தம் எச்சங்களைக் கொண்டு முடியும்

(எகா)

வந்த இராமன் - பெரெச்சம்
வந்து சென்றான் - வினை எச்சம்
சாத்தனும் வந்தான் - உம்மை எச்சம்
இவை போன்ற பிறவும்.

## தொகைநிலைத் தொடர்மொழிகள் பொது இலக்கணம்

**361. பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை**
**முதலிய பொருளின் அவற்றின் உருபிடை**
**ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்தொரு**
**மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்**

பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும், பெயர்ச் சொல்லோடு வினைச் சொல்லும் வேற்றுமை முதலாகிய அறுவகைப் பொருளின் கண், அவற்றின் உருபுகள் இடையே தொக்கி

நிற்குமாறு, இரண்டும் பலவுமாகிய சொற்கள் தொடர்ந்து ஒரு சொல்போல நடப்பவை தொகை நிலைத் தொடர் மொழிகளாம். தொகை என்பது உருபு மறைதல் ஆகும்.

## தொகை நிலைத் தொடர்களின் வகைகள்

**362. வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை,**
**அன்மொழி எனஅத் தொகைஆ றுஆகும்**

வேற்றுமைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை என்று தொகை நிலைத் தொடர் மொழிகள் ஆறு வகைப்படும்.

## வேற்றுமைத் தொகை

**363. இரண்டு முதலாம் இடைஆறு உருபும்**
**வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே**

எழுவாய்க்கும் விளிக்கும் இடையில் நின்ற இரண்டாவது முதலிய ஆறு வேற்றுமை உருபுகளும் வெளிப்படாமல் மறைந்து நிற்கும் தொடர்மொழிகள் வேற்றுமைத் தொகைகளாம்.

(எகா)

நிலம் கடந்தான் - ஐ
தலைவணங்கினான் - ஆல்
ஊர் நீங்கினான் - கு
முருகன் புத்தகம் - இன்
குன்றக்கூகை - கண்

## வினைத்தொகை

**364. காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை**

காலம்காட்டும் வினை உருபுகளான இடை நிலை விகுதி முதலியன மறைந்து நின்ற பெயரெச்சங்கள் வினைத் தொகைகளாகும்.

(எகா)

தோய் தயிர், பெய்ம்மழை, அழி பொருள்

## பண்புத் தொகை

**365. பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்**
**ஒருபொருட்கு இருபெயர் வந்தவும் குணத்தொகை**

பண்பொடு பண்பிற்கு உள்ள ஒற்றுமையை விளக்குவதற்கு வருகிற 'ஆகிய' என்னும் பண்புருபு மறைந்து வருபவையும், ஒரு பொருளின் சிறப்புப் பெயரும், பொதுப் பெயரும் இணைந்து நிற்க, அவற்றிற்கு இடையே அவ்வுருபு தொக்கு வருவனவும் பண்புத் தொகைகள் ஆகும்.

(எகா)

செந்தாமரை, வட்டப்பலகை, நெடுங்கோல்

## உவமைத் தொகை

**366. உவம உருபுஇலது உவமத் தொகையே**

வினை, பயன், மெய், உரு, என்பனவற்றைப் பொருளாகக் கொண்டு வரும் உவம உருபுகள், மறைந்து நின்ற தொடர் மொழிகள் உவமைத் தொகைகள் ஆகும்.

(எகா)

புலிக் கொற்றன் - வினை
மழைக்கை - பயன்
துடியிடை - மெய்
பவளவாய் - உரு

## உவம உருபுகள்

**367. போலப் புரைய, ஒப்ப, உறழ**
**மானக், கடுப்ப, இயைய, ஏய்ப்ப**
**நேர, நிகர, அன்ன, இன்ன**
**என்பனவும், பிறவும் உவமத்து உருபு**

போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர என்னும் செயவென் வினையெச்சங்கள் பத்தும். அன்ன, இன்ன என்ற குறிப்புப் பெயரெச்சங்கள் இரண்டும் இவை போல்வன பிறவும் உவம உருபுகளாம்.

## உம்மைத் தொகை

**368. எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்**
**எனும்நான்கும் அளவையுள் உம் இலது அத்தொகை**

எண்ணலளவை, எடுத்தலளவை, முகத்தலளவை, நீட்டலளவை என்னும் நான்குவகை அளவைகளைப் பற்றி நிற்கும் பெயர்களுள் உம் என்னும் உருபு தொக்கு நிற்பவை உம்மைத் தொகைகள் ஆகும்.

(எகா)

இரண்டரை கபிலபரணர், துணிப்பதக்கு நாழியாழாக்கு

## அன்மொழித் தொகை

**369. ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி**

வேற்றுமைத் தொகை முதலான ஐவகைத் தொகைகளின் புறத்தே அவையல்லாத பிற மொழியாகிய உருபுகள் தொக்கு வருபவை அன்மொழித்தொகை எனப்படும்.

(எகா)

பூங்குழல், வெள்ளாடை

## தொடர் மொழிகளில் பொருள் சிறக்கும் இடம்

**370. முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி**
**எனும் நான்கு இடத்தும் சிறக்கும் தொகைப் பொருள்**

முன்னர் நிற்கும் மொழி, பின்னர் நிற்கும் மொழி, அனைத்து மொழி இவற்றின் புறத்தில் வரும் மொழி ஆகிய இந்நான்கு இடங்களுள் ஒன்றில் தொகை நிலைத் தொடர்ப் பொருள் சிறந்து நிற்கும்.

(எகா)

குடம் வனைந்தான், நிலம் உழுதான்

## இடத்தொகை, பெயர்த்தொகை வேறுபாடு

**371. வல்லோற்று வரினே இடத்தொகை ஆகும்**
**மெல்லோற்று வரினே பெயர்த்தொகை ஆகும்**

தொகைநிலைத் தொடர்களின் இடையே வல்லொற்று வந்தால் அது இடப்பொருளில் வந்த ஏழாம் வேற்றுமைத் தொகையாகும். இடையில் மெல்லொற்று வந்தால் அது பெயர்கள் தொக்க இருபெயரொட்டுப் பண்புத்தொகையாம்.

(எகா)

வடுகக் கண்ணன், வடுகங் கண்ணன்

## உம்மைத் தொகைக்குப் புறனடை

**372. உயர்திணை உம்மைத் தொகைபலர் ஈறே**

உயர்திணையில் ஒருமை குறித்து வரும் உம்மைத் தொகைகள் ரகரவொற்றும், கள்ளீறுமாகிய பலர்பால் விகுதிகளைப் பெற்றுவரும்.

(எகா)

கபில பரணர், தேவன் தேவிகள்

## தொகைகளில் பலபொருள் மயக்கம்

**373. தொக்குழி மயங்குந இரண்டு முதல்ஏழ**
**எல்லைப் பொருளின் மயங்கும் என்ப**

வேற்றுமை உருபு போன்றவை தொக்கு நிற்குமிடங்களின் பொருள்களால் மயங்குதற்குரிய இயல்புடைய தொடர்மொழிகள் இரண்டு முதல் ஏழு வரையில் உள்ள பொருள்களால் மயங்கும் என்று சொல்வர். இது பொருள் மயக்கம் ஆகும்.

(எகா)

தெய்வ வணக்கம், சொல்லிலக்கணம்

## தொகாநிலைத் தொடர்மொழிகள்

**374. முற்றுஈ ரெச்சம் எழுவாய் விளிப்பொருள்**
**ஆறு ருபு இடைஉரி அடுக்கிவை தொகாநிலை**

வினைமுற்று, பெயரெச்சம், வினைஎச்சம், எழுவாய், விளி என்னும் ஐவகைப் பொருள் பற்றிப் புணரும் புணர்ச்சியும், இரண்டாம் வேற்றுமை முதலிய ஆறு வேற்றுமை உருபுகளும் விரிந்து நிற்கப் பெயர் வினைகள் புணர்ந்து வரும் புணர்ச்சியும், இடைச்சொற் புணர்ச்சியும் உரிச்சொற் புணர்ச்சியும், ஒரு சொல் அடுக்கி வரும் புணர்ச்சியும் ஆகிய இவ்வொன்பதும் தொகாநிலைத் தொடர் மொழிகள் ஆகும்.

(எகா)

உண்டான் சாத்தன், குழையன் கொற்றன்

## வழு, வழாநிலை – வழுவமைதி வழுக்கள்

**375. திணையே பாலிடம் பொழுது வினாவிடை**
**மரபாம் ஏழும் மயங்கினாம் வழுவே**

இருதிணையும், ஐம்பாலும், மூவிடமும், முக்காலமும், வினாவும், விடையும், மரபுகளும் ஆகிய இவ்வேழும் முறை தவறி வந்தால் வழுவாகும்.

(எகா)

அவன் வந்தது, நாளை வந்தான்

## வினா விடைகள் வழுவாமல் காத்தல்

**376. ஐயம் திணைபால் அவ்வப் பொதுவினும்**
**மெய்திரி பொருள்மேல் அன்மையும் விளம்புப**

திணைப் பொருளிலும், பால்பொருளிலும், ஐயம் தோன்றியவிடத்து, அவற்றிற்குரிய பொதுச் சொல்லால் கூறியும். இன்னது எனத் துணிந்த பொருளின் மேல் அல்லாத தன்மையை வைத்தும் விளங்கச் சொல்லுவர்.

(எகா)

குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகின்ற உரு?
மகனென்று குற்றி குற்றியல்லன் மகன்

## திணை வழுவமைதி

**377. உயர்திணை தொடர்ந்த பொருள்முதல் ஆறும்**
**அதனோடு சார்த்தின் அத்திணை முடிபின**

உயர்திணை எழுவாயைத் தொடர்ந்து வந்து தாமும் எழுவாயாக நிற்கின்ற அ∴றிணையாகிய பொருள், இடம் முதலிய ஆறும் அவ்வுயர்திணை முடிபைப் பெறும்.

(எகா)

நம்பி பொன் பெரியன், நம்பி நாடு பெரியன்

## திணை பால் மரபு வழுவமைதி

திணைகளும் பால்களும் வெவ்வேறு வினைகளுக்குரிய பலபொருள்களும் ஒன்றொடொன்று கலந்து ஒரு தொடராக வருமாயின் அவை சிறப்பின் காரணமாகவும், இழிவின் காரணமாகவும் ஒரு முடிபைப் பெறுவனவாகும்.

(எகா)

அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன்

## திணை பால் வழுவமைதி

**379. உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்**
**இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே**

மகிழ்ச்சியினாலும், மேன்மைப் படுத்திச் சொல்லுதலினாலும், சிறப்பினாலும், கோபத்தினாலும், பழிப்பினாலும் பாலும் திணையும் வழுவி வருதல் உண்டு அவ்வாறு வரினும் அதனை இயல்பாகவே கருதுவர்.

(எகா)

தன் புதல்வனை ‘என் அம்மை வந்தாள்’ எனக் கூறுவது

## பால் இட வழுவமைதி

**380. ஒருமையிற் பன்மையும் பன்மையின் ஒருமையும்**
**ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே**

ஒருமைப்பாலில் பன்மைப்பாற் சொல்லையும், பன்மைப்பாலில் ஒருமைப் பாற் சொல்லையும், மூவிடங்களில் ஒன்றற்குரிய சொல்லில் பிறவிடங்களுக்கு உரிய சொற்களையும் தழுவிக் கூறுதல் உண்டு. இவற்றை வழுவமைதியாகக் கொள்வர்.

(எகா)

வெயில் எல்லாம் மறைத்தது மேகம், சாத்தன் தாய் இவை செய்வேனோ?

## இடம் வழுவாமல் காத்தல்

**381. தரல் வரல் கொடை செலல் சாரும் படர்க்கை**
**எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும்**

தரல், வரல், கொடை, செலல் என்ற நான்கு சொற்களும் படர்க்கை இடத்தன. அவற்றுள் முதலில் உள்ள தரல், வரல் என்ற இரண்டு சொற்களும் தம்மை, முன்னிலை இடங்களுக்கு உரியன.

(எகா)

அவனுக்கு தந்தான், எனக்குத் தந்தான்

## காலம்

**382. இறப்புஎதிர்வு நிகழ்வுஎனக் காலம் மூன்றே**

காலம், இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று வகைப்படும்.

## கால வழுவமைதி

**383. முக்கா லத்திலும் ஒத்தியல் பொருளைச்**
**செப்புவர் நிகழும் காலத் தானே**

மூன்று காலங்களிலும் தம் தொழில் இடைவிடாமல் ஒரு தன்மையாக நடக்கின்ற பொருள்களை நிகழ்காலத்தினால் சொல்லுவர்.

(எகா)

மலை நிற்கிறது, தெய்வம் இருக்கிறது.

**384. விரைவினும், மிகவினும், தெளிவினும், இயல்பினும்**
**பிறவும் பெறூஉம்முக் காலமும் ஏற்புழி**

விரைவினாலும், மிகுதியினாலும், தெளிவினாலும், இயல்பினாலும் மூன்று காலங்களும் ஒன்று மற்றொன்றாக மாற்றிச் சொல்லப்படவும் பெறும்.

(எகா)

உண்டு கொண்டு இருப்பவன், அக்காட்டில் போனால் கூறை

## அறுவகை வினா

**385. அறிவு, அறியாமை, ஐயுறல், கொளல், கொடை**
**ஏவல் தரும்வினா ஆறும் இழுக்கார்**

அறிதல், அறியாமை, சந்தேகங்கள், வாங்கிக்கொள்ளுதல், கொடுத்தல், ஏவுதல் ஆகிய இவ்வறுவகைப் பொருளையும் தருமாறு வரும் அறுவகை வினாக்களையம் நீங்காது ஏற்றுக் கொள்வர் புலவர்.

(எகா)

ஆசிரியர் மாணவனிடம் கேட்பது, மாணவன் ஆசிரியரிடம் கேட்பது

## எண்வகை விடை

**386. சுட்டு, மறை, நேர், ஏவல், வினாதல்**
**உற்றது உரைத்தல், உறுவது கூறல்,**
**இனமொழி எனும்எண் இறையுள் இறுதி**
**நிலவிய ஐந்தும்அப் பொருண்மையின் நேர்ப**

சுட்டிக்காட்டிக் கூறுதல், எதிர்மறுத்து கூறுதல், உடன்பட்டுக் கூறுதல், எதிராக ஏவுதல், எதிராக வினாவுதல், நேரத்தைச் சொல்லுதல், இனி நேரப் போவதைச் சொல்லுதுல், வினவியதற்கு இனமானதைச் சொல்லுதல் என்னும் இவ் எட்டுவகை விடைகளில், இறுதிக்கண் உள்ள ஐந்தும் அவ்விடைப் பொருளையே தருதலின் விடைகளாகவே கொள்வர்.

(எகா)

மதுரைக்கு வழியாது ‘இது’ என கூறுவது, இது செய்வாயா ‘செய்வேன்’ என கூறுவது

## வினா விடைகளில் முதல்,சினை வழுவாமை

**387. வினாவினும் செப்பினும் விரவா சினைமுதல்**

வினாவும் பொழுதும், விடை கூறும் பொழுதும், சினையும் முதலும் தம்முள் மயங்கப் பெறாது.

(எகா)

சாத்தன் நல்லனோ?, சாத்தனின் கொற்றன் நல்லவன்.

## மரபு

**388. எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்**
**செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே**

எந்த ஒரு பொருளை, யாதொரு சொல்லால், எம்முறையில் அறிவுடையோர் வழங்கினரோ, அப்பொருளை அச்சொல்லால் அம்முறையில் வழங்குதலே மரபாகும்.

(எகா)

பசுக்கன்று, குதிரைக்குட்டி – மரபு
பசுவின் குட்டி, ஆட்டுப் பாகன் - மரபு வழு

## மரபு வழாநிலை

**389. வேறுவினைப் பல்பொருள் தழவிய பொதுச்சொலும்**
**வேறுஅவற்று எண்ணும்ஓர் பொதுவினை வேண்டும்**

வேறு வேறு வினைகளுக்கு உரிய பலபொருள்களையும் ஒருங்குதழுவி நிற்கும் ஒரு பொதுச் சொல்லும், அவற்றின் சிறப்புச் சொற்களாக எண்ணி நிற்கும் பல சொற்களும், ஒன்றிற்கு மட்டுமே உரிய சிறப்பு வினையை வேண்டாமல் எல்லாவற்றிற்கும் உரியதான ஓர் பொது வினையை வேண்டி நிற்கும்.

(எகா)

அடிசில் என்பது உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன என்பவற்றிற்கெல்லாம் பொதுச் சொல்லாதல்

**390. வினைசார்பு இனம் இடம் மேவி விளங்காப்**
**பலபொருள் ஒருசொல் பணிப்பர் சிறப்புஎடுத்தே**

குறித்த பொருளை விளக்கும் வினையும், சார்பும், இனமும் இடமும் பொருந்திய, பொருள் விளங்காத பலபொருள் ஒரு சொல்லைச் சிறப்புச் சொல்லோடு கூட்டிச் சொல்லுவர்.

(எகா)

மா பூத்தது, மாமர மேறினான்

## இசை வேறுபாட்டால் பொருள் துணியப்படுதல்

**391. எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி**
**இசைத்தரி பால்தெளி வெய்தும் எனப்**

எழுத்தின் தன்மை வேறுபடாமல், பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயப்பட நிற்கின்ற தொடர் மொழிகள், இசையறுத்துச் சொல்லும் வகையினால் பொருள் துணியப்படும் என்று சொல்லுவர்.

(எகா)

செம்பொன் பதின்றொடி, நாகன் றேவன் போத்து

## மரபு வழாநிலையும் வழுவமைதியும்

**392. ஒருபொருள் மேல்பல பெயர்வரின் இறுதி**
**ஒருவினை கொடுப்ப தனியும் ஒரோவழி**

ஒரு பொருளின் மேல் பல பெயர்கள் வருமாயின் அவற்றின் இறுதியில் ஒரு முடிக்கும் சொல்லைக் கொடுத்து முடிப்பர். சில இடங்களில் பெயர்தோறும் தனித்தனி முடிக்கும் சொல் கொடுத்து முடிப்பர்.

(எகா)

ஆசிரியன் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தன் வந்தான், மூவர்கள் முதல்வன் வந்தான்.

## இயற்பெயர் வரும் இடம்

**393. திணைநிலம் சாதி குடியே உடைமை**
**குணம்தொழில் கல்வி சிறப்பாம் பெயரொடு**
**இயற்பெயர் ஏற்றிடின் பின்வரல் சிறப்பே**

ஐந்திணையும், இடமும், குலமும், குடியும், உடைமையும், குணமும், தொழிலும், கல்வியும் ஆகிய இவற்றைப் பற்றி வரும் சிறப்புப் பெயருடனே இயற்பெயரும் ஒருங்கு வருமானால் அவ் இயற்பெயர் சிறப்புப் பெயரின் பின்னே வருதலே சிறந்த மரபாகும்.

(எகா)

குன்றவன் கொற்றன் - கொற்றன் குன்றவன்
நாஞ்சில் நெடுமாறன் - நெடுமாறன் நாஞ்சில்

## சுட்டுப் பெயர் வருமிடம்

**394. படர்க்கைமுப் பெயரோடு அணையின் சுட்டுப்**
**பெயர்பின் வரும்வினை எனின்பெயர்க்கு எங்கும்**
**மருவும் வழக்கிடைச் செய்யுட்கு ஏற்புழி**

படர்க்கை இடத்தின்கண் வரும் உயர்திணைப் பெயர்கள், அஃறிணைப் பெயர்கள், பொதுப்பெயர்கள் என்னும் மூவகைப் பெயர்களோடு, சுட்டுப் பெயரும் சேர அவ்விடத்தில்

வினையாகிய முடிக்கும் சொல்வரின், அச்சுட்டுப் பெயர் அம்மூவகைப் பெயர்களுக்கும் பின்னர் வரும். அம்முடிக்கும் பெயர்க்கு முன்னும் பின்னும் வரும். இம்மரபு உலக வழக்கின்கண் வருவதாகும். செய்யுளிடத்து வரையறை இன்றி வேண்டியவாறே வரப்பெறும்.

(எகா)

நம்பி வந்தான், காளை வந்தது, நம்பி அவன், யானை அது.

## அடுக்குத் தொடர்

**395. அசைநிலை பொருள்நிலை இசைநிறைக்கு ஒருசொல்**
**இரண்டு மூன்றுநான்கு எல்லைமுறை அடுக்கும்**

ஒரு சொல்லானது அசைநிலையாதற்கும் விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் முதலிய பொருள்களின் நிலைப்பேற்றிற்கும், இசைநிறைப்பதற்கும் முறையே இரண்டு, மூன்று, நான்கு முறைகள் அடுக்கி வரும். எனவே அசைநிலைக்கு இரண்டு முறையும். பொருள் முறைக்கு இரண்டு, மூன்று முறையும் இசை நிறைக்கு இரண்டு, மூன்று, நான்கு முறையும் அடுக்கி வரும்.

(எகா)

அன்றே, அன்றே, போ,போ,போ, பாம்பு, பாம்பு

## இரட்டைக் கிளவி

**396. இரட்டைக்கிளவி இரன்டின் பிரிந்து இசையா**

இரட்டைக்கிளவி என்பது இரண்டு சொற்கள் சேர்ந்து பொருள் தருவது. தனித்து நின்றால் பொருள் தராது.

(எகா)

சலசல, கலகல

## ஒரு பொருட் பன்மொழி

**397. ஒரு பொருட் பல்பெயர் பிரிவில் வரையார்**

ஒரு பொருளைக் குறித்துவரும் பல பெயர்கள், அப்பொருளையே வேறுபாடின்றிச் சுட்டி உணர்த்தும்.

(எகா)

தென்னாட்டு பெர்னாட்ஷா பேரறிஞர் அண்ணாத்துரை

## முற்றுமை வேண்டும் இடம்

**398. ஒரு பொருள் பன்மொழி சிறப்பினின்வழா**

ஒரு பொருளைக் குறித்துவரும் பல சொற்கள் சிறந்து நிற்கையில் அவை வழு என்று நீக்கப்படாமல் வழுவமைதி என்று ஏற்றுகொள்ளப்படும்.

(எகா)

உயர்ந்தோங்கு பெருமலை
இரும்பேர் ஒக்கல்

## முற்றும்மை வேண்டும் இடம்

**399. இணைத்துஎன்று அறிபொருள், உலகில் இலாப்பொருள்**
**வினைப்படுத்து உரைப்பின் உம்மை வேண்டும்**

இவ்வளவு என்று வரையறுத்து அளவறியப்பட்ட பொருளையும், எக்காலத்திலும் எவ்விடத்திலும் உலகில் இல்லாத பொருளையும், வினைமுடித்ததுக் கூறும் பொழுது முற்றும்மை பொருளையும், வினைமுடித்துக் கூறும் பொழுது முற்றும்மை கொடுத்துக் கூறவேண்டும்.

(எகா)

தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தனர், கண் இரண்டும் சிவந்தன

## செயப்படுபொருளைக் கருத்தாவாகக் கூறுதல்

**400. செய்யப்ட்டு பொருளைச் செய்தது போலத்**
**தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே**

செயப்படு பொருளைக் கருத்தாவைப் போல வைத்து, அதன்மேல் அக்கருத்தாவின் வினையை ஏற்றிக் கூறுதலும் வழக்கில் உள்ளது.

(எகா)

இவ்வீடு யான் இருந்தது, இப்படம் யான் வரைந்தது.

## அடை சேர் மொழிகள்

**401. பொருள்முதல் ஆறாம் அடைசேர் மொழிஇனம்**
**உள்ளவும் இல்லவும் ஆம்இரு வழக்கினும்**

பொருள் முதலிய ஆறையும் அடைகளாகப் பெற்றுவரும் சொற்கள், உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் இனம் உள்ளவை இனம் இல்லாதவை என இருவகையாகும்.

(எகா)

நெய்குடம் - உப்பளம்
குளநெல் - ஊர்மன்று

## அடைமொழி மரபு வழுவாமற் காத்தல்

**402. அடைமொழி இனம்அல் லதும்வரும் ஆண்டுறின்**

அடைமொழிகள் இனத்தைத் தருதலேயன்றி, அவ்விடத்திற்குப் பொருந்துமாயின், இனமல்லாததையும் தரும்.

(எகா)

பாவம் செய்தால் நரகம் சேர்வான், ‘புண்ணியம் செய்தால் சுவர்க்கம்’ என இனப்பொருள் தரும்.

## அடைமொழிகள் முதல், சினைகளை அடுத்து வருதல்

**403. அடைசினை முதன்முறை அடைதலும் ஈரடை**
**முதலோடு ஆதலும் வழங்கியல் ஈரடை**
**சினயொடு செறிதலும் மயங்கலும் செய்யுட்கே**

அடைமொழிகள் முதல், சினைகளை அடுத்து வருங்கால், ஓரடை, ஒருசினை, ஒருமுதல் என முறையே ஒன்றையொன்று சிறப்பித்து வருதலும். இரண்டு அடை மொழிகள் ஒரு முதலைச் சிறப்பித்து வருதலும் உலக வழக்காகும். இரண்டு அடைமொழிகள் ஒரு சினையைச் சிறப்பித்து வருதலும் இவ்வரம்பு கடந்து வருதலும் செய்யுளுக்கு உரிய வழக்காகும்.

(எகா)

செங்கால் நாரை – உலக வழக்கு
கரு நெடுங் கண் - செய்யுள் வழக்கு

## இயற்கைப் பொருள் வழங்கும் மரபு

**404. இயற்கைப் பொருளை அற்றெனக் கிளத்தல்**

இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள் என்னும் இருவகைப் பொருள்களுள் இயற்கைப் பொருள்களை இத்தன்மையது என்று சொல்லுதல் வேண்டும்.

(எகா)

நிலம் வலிது, மயிர் கரிது

## செயற்கைப் பொருள் வழங்கும் மரபு

**405. காரண முதலா ஆக்கம் பெற்றும்,**
**காரணம் இன்றி ஆக்கம் பெற்றும்,**
**ஆக்கம் இன்றியும் இயலும் செயும்பொருள்**

செயற்கைப் பொருள் காரணச் சொல் முன்வர ஆக்கச் சொல் பின்வரப் பெற்றும். காரணச் சொல் மறைந்து நிற்க ஆக்கச் சொல் வரப்பெற்றும் ஆக்கச் சொல் மறைந்து நிற்கக் காரணச் சொல் வரப்பெற்றும் ஆக்கம், காரணம் என்ற இருவகைச் சொற்களும் மறைந்து நிற்கவும் வரப்பெறும்.

(எகா)

எருப் பெய்து மயிர் நல்ல வாயின, கடுவும் மயிர் நல்ல

## வணிகர் மரபு

**406. தம்பால் இல்லது இல்எனின் இனனாய்**
**உள்ளது கூறி மாற்றியும், உள்ளது**
**சுட்டியும் உரைப்பர் சொற்சுருங் குதற்கே**

ஒருவன் வேண்டும் பொருள் தம்மிடம் இல்லையாயின், வினவப்பட்டதற்கு இனமாகத் தம்மிடம் உள்ள பொருளைச் சொல்லி அதனை இல்லையென உணர்த்தியும், வேண்டப்பட்ட பொருள் தன்னிடம் உண்டெனின் இவ்வளவு உண்டென்று சுட்டியும், சொற்கள் சுருங்குதற் பொருட்டு உரைப்பர்

(எகா)

தொல்காப்பியம் இருக்கிறதா என கேட்டதற்கு நன்னூல் இருக்கிறது என கூறுவது.

## இரத்தல் குறித்த மரபு

**407. ஈதா கொடுஎனும் மூன்றும் முறையே**
**இழிந்தோன், ஒப்போன், மிக்கோன் இரப்புரை**

ஈ, தா, கொடு என்னும் மூன்று சொற்களும் முறையே, இழிந்தோன் உயர்ந்தவனிடத்தும். ஒப்போன் ஒப்போனிடத்தும். உயர்ந்தோன் இழிந்தோனிடத்தும் இரத்தற்கு வரும் சொற்களாகும்.

(எகா)

அப்பா - ஈ
நண்பா – தா
மகனே - கொடு

## குறிப்பால் பொருள் தருதல்

**408. முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே**

வெளிப்படையாக இல்லாமல், குறிப்பால் பொருள் உணரப்படும் சொற்களும் உண்டு

(எகா)

அவன் சொந்த நான்கு சக்கர வண்டியில் கல்லூரிக்கு வருகிறான்.

## அ.ஃறிணை இடத்துக் கூறும் மரபு

**409. கேட்குந போலவும், கிளக்குந போலவும்,**
**இயங்குந போலவும், இயற்றுந போலவும்,**
**அ.ஃறிணை மருங்கினும் அறையப் படுமே**

கோளாதனவற்றைக் கேட்பன போலவும், பேசாதனவற்றைப் பேசுவன போலவும், நடவாதனவற்றை நடப்பன போலவும், இத்தொழில்கள் அல்லாத வேறு தொழில்களைச் செய்யாதவற்றைச் செய்பவை போலவும் அ.ஃறிணை இடத்தும் சொல்லப்படும்.

(எகா)

பயிர்கள் தண்ணீர், தண்ணீர்னு கத்துது

## உருவக, உவம மரபு

**410. உருவக உவமையில் திணைசினை முதல்கள்**
**பிறழ்தலும் பிறவும் பேணினர் கொளலே**

உருவகத்திலும், உவமையிலும், உயர்திணை, அ.ஃறிணைகளும். சினைமுதல்களும் தம்முள் மயங்கி வருதலையும், இவ்வியலுள் சொல்லாதவற்றையும் பேணி ஏற்றுக் கொள்க.

(எகா)

அரசனாகிய சிங்கத்திற்குப் பகைவர் கூட்டமாகிய யானைகள் அஞ்சி ஓடின.

## பொருள்கோள் பெயரும் தொகையும்

**411. யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்**
**தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்டு**
**அடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே**

யாற்றுநீர்ப் பொருள்கோள், மொழி மாற்றுப் பொருள்கோள், நிரல் நிறைப் பொருள்கோள், விற்பூட்டுப் பொருள்கோள் தாப்பிசைப் பொருள்கோள், அளைமறி பாப்புப் பொருள்கோள், கொண்டு கூட்டுப் பொருள்கோள், அடிமறிமாற்றுப் பொருள்கோள் எனப் பொருள்கோள் எட்டு வகைப்படும். பொருள்கோள் செய்யுளில் பொருள் அமைந்து நிற்கும் முறைமை.

## யாற்றுநீர்ப் பொருள்கோள்

**412. மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்**
**அற்றற்று ஒழுகும் அஃது யாற்றுப் புனலே**

மற்றைய பொருள்கோள்போல் ஒவ்வொரு அடியும் பிற அடிகளை நோக்காது, ஆற்று நீர் தொடர்ந்து ஒழுகுவது போன்று அடிதோறும் சிறந்த பொருள் அமைந்து நடப்பது யாற்றுநீர்ப் பொருள்கோள் ஆகும்.

(எகா)

சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம் போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்…

## மொழிமாற்றுப் பொருள்கோள்

**413. ஏற்ற பொருளுக்கு இயையு மொழிகளை**
**மாற்றி ஓரடியுள் வழங்கல் மொழிமாற்றே**

ஏற்ற இரண்டு பயனிலைகளுக்குப் பொருந்தத் தக்க சொற்களைத் தனித் தனியாகக் கூட்டி ஓர் அடியினுள்ளே சொல்வது மொழிமாற்றுப் பொருள்கோளாகும்.

(எகா)

சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய, யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப

## நிரல்நிறைப் பொருள்கோள்

**414. பெயரும் வினையுமாம் சொல்லையும் பொருளையும்**
**வேறு நிரனிறீஇ முறையினும் எதிரினும்**
**நேரும் பொருள்கோள் நிரனிறை நெறியே**

பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லுமாகிய சொற்களையும், அவை கொள்ளும் பெயரும் வினையுமாகிய பயனிலைகளையும், வேறாக வரிசைப்படுத்தி, முறையாகவாயினும், முறை மாறுபடவாயினும் இதற்கு இது பயனிலை என்னும் பொருள்படக் கூறுவது நிரல்நிறைப் பொருள்கோள் ஆகும்.

(எகா)

கொடிவளை கொட்டை நுசப்புண்கண் மேனி

மதிபவள முத்தம் முகம்வாய் முறுவல்

## பூட்டுவிற் பொருள்கோள்

**415. எழுவாய் இறுதி நிலைமொழி தம்முள்**
**பொருள் நோக் குடையது பூட்டுவில் ஆகும்**

ஒரு செய்யுளில் முதலிலும், இறுதியிலும் நிற்கும் சொற்கள் தம்முள் பொருளை நோக்கி அமைந்திருப்பது பூட்டுவிற் பொருள்கோள் ஆகும்.

(எகா)

திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்து படிபெரிதாம் ஏதம்

## தாப்பிசைப் பொருள்கோள்

**416. இடைநிலை மொழியே ஏனை ஈரிடத்தும்**
**நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை**

ஒரு செய்யுளின் நடுவில் நிற்கும் சொல், அதன் முதலிலும் இறுதியிலும் சென்று இயைந்து பொருள் தருவது தாப்பிசைப் பொருள்கோள் ஆகும்.

(எகா)

உண்ணமை உள்ள துயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு

## அளைமறிப்பாப்புப் பொருள்கோள்

**417. செய்யுள் இறுதி மொழிநடை முதலினும்**
**எய்திய பொருள்கோள் அளைமறி பாப்பே**

ஒரு செய்யுளின் இறுதியில் நின்று சொல், அதன் இடையிலும், பின்னர் முதலிலும் சென்று இயைந்து பொருள் தருவது அளைமறி பாப்புப் பொருள்கோள் எனப்படும்.

(எகா)

தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து
தண்டூன்றித் தளர்வார் தாமும்

## கொண்டுகூட்டுப் பொருள்கோள்

**418. யாப்படி பலவினும் கோப்புடை மொழிகளை**

**ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே**

செய்யுள் அடிகள் பலவற்றிலும் கோக்கப்பட்டுள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்ற இடங்களில் எடுத்துக் கொண்டு கூட்டி உரைப்பது கொண்டு கூட்டுப் பொருள் ஆகும்.

(எகா)

தெங்கங்காய் போலத் திரண்டுரண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை உடைத்தன் மாமேனி

## அடிமறி மாற்றுப் பொருள்கோள்

**419. ஏற்புழி எடுத்துடன் கூட்டுறும் அடியவும்**
**யாப்பீறு இடைமுதல் ஆக்கினும் பொருள் இசை**
**மாட்சியும் மாறா அடியவும் அடிமறி**

பொருளுக்கு ஏற்புடைய இடத்தில் எடுத்துக் கூட்டியுரைக்கும் அடியை உடையனவும், யாதேனும் ஓர் அடியை எடுத்து அச்செய்யுளின் இறுதி, நடு, முதல் இடங்களில் இயைத்துப் பொருள் உரைத்தாலும். அதன் பொருளும், சந்தமும், அழகும் மாறாது நிற்பனவும் அடிமறிமாற்றுப் பொருள்கோள் ஆகும்.

(எகா)

நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துதான் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்

## 4.இடையியல்

இடைச் சொற்களின் இலக்கணங்களை உணர்த்தும் இயல்

## இடைச் சொல்லின் பொதுவிலக்கணம்

**420. வேற்றுமை வினைசா ரியையொப் புஉருபுகள்**
**தத்தம் பொருள இசைநிறை அசைநிலை**
**குறிப்புஎன் எண்பகுதியின் தனித்து இயலின்றிப்**
**பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து**
**ஒன்றும் பலவும்வந்து ஒன்றுவது இடைச்சொல்**

ஐ, ஆன் முதலிய வேற்றுமை உருபுகளும். விகுதி இடைநிலைகளுமாகிய வினை உருபுகளும். அன், ஆன் முதலிய சாரியை உருபுகளும். போல, புரைய முதலிய உவம உருபுகளும். தத்தமக்கு உரிய பொருளை உணர்த்தும் ஏ, ஓ முதலியனவும், செய்யுள்ளிசை நிறைத்தற்கு வருபவையும். அசையாய் வருகிறவையும். ஒலி அச்சம், விரைவு என்பவற்றைக் குறிப்பால் உணர்த்தி வருபவையும் ஆகிய இவ்வெட்டு வகையினை உடையனவாய்த் தனித்து நடக்கும் தன்மை இல்லாமல், பெயர்ச் சொல்லிடத்தும், முன்னேயாயினும் ஓரிடத்தில் ஒன்றாயினும் பலவாயினும் வந்து ஒன்றுபட்டு நடக்கும் தன்மையை உடையது இடைச்சொல்லாகும்.

(எகா)

ஊரினன், நிலத்தினன், வாழ்க

## இடைச்சொல்லின் பொருள்கள்

**421. தெரிநிலை தோற்றம் ஐயம் முற்று எண் சிறப்பு**
**எதிர்மறை எச்சம் வினாவிழைவு ஒழியிசை**
**பிரிப்புக் கழிவு ஆக்கம் இன்னன இடைப்பொருள்**

தெரிநிலையும், தெளிவும், ஐயமும், முற்றும், எண்ணும், சிறப்பும், எதிர்மறையும், எச்சமும், வினாவும், விருப்பமும், ஒழிந்த சொல்லும், பரிநிலையும், கழிவும், ஆக்கமும் இவைபோல்வன பிறவும் தத்தம் பொருள வென்ற இடைச்சொற்களின் பொருள்களாம்.

(எகா)

அவன், எவன், இவன், உவன்

## ஏகார இடைச்சொல்

**422. பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்**
**இசைநிறை எனஆறு ஏகா ரம்மே**

பிரிநிலையும், வினாவும், எண்ணும், ஈற்றிலசைத்தலும், தெளிவும், இசைநிறைத்தலும் என்று ஆறு பொருளை ஏகார இடைச்சொல் தரும்.

(எகா)

அவர்களுள் இவனே ஆசிரியன், நியே எடுத்தாய், நிலனே, நீரே, தீயே

## ஓகார இடைச் சொல்

**423. ஒழியிசை வினாச்சிறப்பு எதிர்மறை தெரிநிலை**
**கழிவு அசை நிலைபிரிப்பு எனஎட்டு ஓவே**

ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, கழிவு, அசைநிலை, பிரிநிலை என்ற எட்டுப் பொருள்களை ஓகார இடைச் சொல் தரும்.

(எகா)

படிக்கவோ, குற்றியோ மகனோ, ஓஓ கொடியன்

## ‘என’, ‘என்று’ என்னும் இடைச்சொற்கள்

**424. வினை பெயர் குறிப்புஇசை எண்பண்பு ஆறினும்**

**எனவெனு மொழிவரும் என்றும் அற்றே**

வினை, பெயர், குறிப்பு, இசை, எண், பண்பு, என்னும் ஆறு பொருள்களில் என, என்று என்னும் இரண்டு இடைச் சொற்களும் வரும்.

(எகா)

மகன் தேர்ச்சி பெற்றான் எனத் தந்தை மகிழ்ந்தான்

## உம்மை இடைச்சொல்

**425. எதிர்மறை சிறப்ஐயம் எச்சமுற் றுஅளவை**
**தெரிநிலை ஆக்கமோடு உம்மை எட்டே**

எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அறவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் எட்டு பொருள்களில் ‘உம்’ என்னும் இடைச் சொல் வரும்.

(எகா)

கண்ணன் வருவதற்கும் உரியன், குறவரும் அஞ்சும் மலை

## முற்றும்மைக்குச் சிறப்பு விதி

**426. முற்றுமை ஒரோவழி எச்சமும் ஆகும்**

முற்றுப் பொருள்களில் வரும் உம்மை, சில இடங்களில் எச்சப் பொருளையும் தரும்.

(எகா)

எல்லோரும் வரவில்லை, முழுவதும் படிக்க வில்லை.

## எச்ச உம்மைக்கு சிறப்பு விதி

**427. செவ்வெண் ஈற்றதாம் எச்ச வும்மை**

எச்சப் பொருளில் வருகிற உம்மை, செவ்வெண்ணில் வருமாயின் ஈற்றில் வரும்.

(எகா)

கல்வி, செல்வம், ஒழுக்கம்.

## சில எண்ணிடைச் சொற்களுக்கு இலக்கணம்

**428. பெயர்ச்செவ் வெண்ஏ என்றா எனாஎண்**
**நான்கும் தொகைபெறும் உம்மைஎன்று எனஓடு**

**இந்நான்கு எண்ணும் அ∴தின்றியும் இயலும்**

பெயர்களிடத்தே எண்ணிடைச்சொல் தொக்கு வருகிறது செவ்வெண்ணும், தொகாமல் வருகிற ஏ, என்றா, எனா, இம்மூன்று எண்ணிடைச் செற்களும் ஆகிய நான்கும் தொகைச் சொல்லைப் பெற்றுவரும். உம்மை, என்ற, என, ஒடு ஆகிய எண்ணிடைச் சொற்கள் நான்கும் தொகை பெறாமலும் வரும்.

(எகா)

சாத்தன் கொற்றன் இருவரும் வந்தனர்
சாத்தனே கொற்றனே இருவரும் வந்தனர்

## சில எண்ணிடையச் சொற்களுக்குச் சிறப்பு விதி

**429. என்றும் எனவும் ஒடுவும் ஒரேவழி**
**நின்றும் பிரிந்துஎண் பொருள்தொறும் நேரும்**

என்று, என, ஒடு என்னும் இம்மூன்று எண்ணிடைச் சொற்களும் எண்ணப்படும் பொருள்கள் தோறும் நில்லாமல் ஒரிடத்து நிற்பினும், நின்ற இடத்தில் நின்றே, எண்ணப்படும் பொருள்கள் தோறும் சென்று பொருந்தும்.

(எகா)

வினை பகை, பகை பாவம் அச்சம், பொருள் கருவி காலம் வினை

## எண்ணிடையச் சொற்கள் வினையொடும் வருதல்

**430. வினையொடு வரினும்எண் இனைய ஏற்பன.**

பொருந்துவனவாகிய சில எண்ணிடைச் சொற்கள் வினைச்சொல்லோடு வந்தாலும் பெயர்ச் சொல்லோடு வந்தவை போல்வனவாம்.

(எகா)

மயில் ஆட குயில் பாட, படித்தும் கேட்டும் கல்வியில் சிறந்தார்

## தில் என்னும் இடைச்சொல்

**431. விழவே காலம் ஒழியிசை தில்லே**

ஆசை, காலம், ஒழிந்த சொல் ஆகிய மூன்று பொருள்களையும் தில் என்னும் இடைச்சொல் தரும்.

(எகா)

அரிவையைப் பெறுகதில் அம்ம இவ்வூரே, பெற்றாங்கு அறிகதில் அம்ம இவ்வூரே

## மன் என்னும் இடைச்சொல்

**432. மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்**
**கழிவு மிகுதி நிலைபே றாகும்**

அசைநிலை, ஒழியிசை, ஆக்கம், கழிவு, மிகுதி, நிலைபெறுதல் போன்ற ஆறு பொருள்களின் மன் என்னும் இடைச்சொல் வரும்.

(எகா)

அதுமன் கொண்கன் தேரே, கூறியதோர் வாள்மன்

## மற்று என்னும் இடைச்சொல்

**433. வினைமாற்று அசைநிலை பிறிதெனும் மற்றே**

வினைமாற்றும், அசைநிலை, பிறிது ஆகிய மூன்று பொருள்களையும் மற்று என்னும் இடைச்சொல் தரும்.

(எகா)

மற்றறிவாம் நல்வினை யாமிளையம் என்னாது, மற்றென்னை ஆள்க

## மற்றையது என்னும் இடைச்சொல்

**434. மற்றையது என்பது சுட்டிய தற்குஇனம்**

மற்றையது என்னும் இடைச்சொல் முன்னே சுட்டிய பொருளை ஒழித்து அதற்கு இனமான பொருள்களைக் குறிக்கும்.

(எகா)

ஒரு நூலிற்கு இரண்டு உரை நூல்கள் உள்ளது போல

## கொல் என்னும் இடைச்சொல்

**435. கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே**

ஐயம், அசைநிலை என்ற இரண்டு பொருள்களையும் கொல் என்னும் இடைச்சொல் தரும்.

(எகா)

அவன் குமரன் கொல், கொற்றன் கொல்

## ஒடு, தெய்ய என்னும் இடைச்சொற்கள்

**436. ஒடுவும் தெய்யவும் இசைநிறை மொழியே**

ஒடு, தெய்ய என்னும் இரண்டு சொற்களும் இசைநிறைப் பொருளைத் தரும் இடைச் சொற்களாகும்.

(எகா)

விதைக்குறு வட்டிற் போதாடு பொதுள, சொல்லென் தொய்ய நின்னொடு பெயர்த்தே

## அந்தில், ஆங்கு என்னும் இடைச்சொற்கள்

**437. அந்தில்ஆங்கு அசைநிலை இடப்பொருள் அவ்வே**

அந்தில், ஆங்கு என்னும் இரண்டு இடைச் சொற்களும், அசைநிலைப் பொருளிலும், இடப்பொருளிலும் வரும்.

(எகா)

அந்திற் கழலினன் கச்சினன், வருமே சேயிழை யந்திற் கொழுநர் காணிய

## அம்ம என்னும் இடைச்சொல்

**438. அம்ம உரையசை கேண்மின்என் றாகும்**

அம்ம என்ற இடைச்சொல் உரையசைப் பொருளிலும், ஒன்று சொல்லுவேன் 'கேளும்' என்னும் ஏவற்பொருளிலும் வரும்.

(எகா)

அது மற்றம், அம்ம வாழி தோழி

## மா என்னும் இடைச்சொல்

**439. மாவென் கிளவி வியங்கோள் அசைச்சொல்**

மா என்னும் சொல் வியங்கோளிடத்து வருகிற அசைச் சொல்லாகும்.

(எகா)

உப்பின்று – புறக்கை யுண்கமா கொற்கை யோனே

## முன்னிலை அசைச்சொல்

**440. மியாயிக மோமதி அத்தை இத்தை**
**வாழிய மாளவீ யாழமுன் னிலையசை**

மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை வாழிய, மாள, ஈ, யாழ என்னும் பத்து இடைச்சொற்களும் முன்னிலையிடத்து வரும் அசைச் சொற்களாகும்.

(எகா)

சினையன் செழுந்தலையன் சென்மியா, சென்மதி பெரும, சொலிய ரத்தைநின் வெகுளி

## எல்லாவிடத்தும் வரும் அசைச்சொல்

**441. யாகா பிறபிறக்கு அரோபோ மாது இகும்**
**சின்குரை ஒரும் போலும் இருந்துஇட்டு**
**அன்று ஆம் தாம்தான் கின்றுநின்று அசைமொழி**

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஒரும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான், கின்று, நின்று என்னும் இருபது இடைச் சொற்களும் எல்லா இடங்களிலும் வரும் இடைச்சொற்கள் ஆகும்.

(எகா)

தோழியா சுவாகதம் போது கீங்கென - யா
இவளிட்ட காண்டிகா - கா
ஆனை அல்ல பிற - பிற

## 5. உரியியல்

உரிச் சொற்களின் இலக்கணங்களை உணர்த்தும் இயல்

## உரிச்சொல்லின் பொதுவிலக்கணம்

**442. பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி**
**ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை**
**ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல்**

இசை, குறிப்பு, பண்பு ஆகிய பல்வேறு வகைப்பட்ட பண்புகளைத் தெரிவிக்கின்ற பெயராகி, அவ்வாறு தெரிவிக்கும் போது, ஒரு சொல் ஒரு குணத்தையும், பல குணங்களையும் தெரிவிப்பனவாய்ப்: பெயர்ச் சொல் வினைச் சொற்களை விட்டு நீங்காதனவாய்ச்: செய்யுளுக்கு உரிமை பூண்டு வருவன உரிச்சொற்களாகும்.

## பண்பின் இலக்கணம்

**443. உயிர்உயிர் அல்லதாம் பொருட்குணம் பண்பே**

உயிர் உடையதும், உயிர் அல்லாததும் ஆகிய இருவகையுள் அடங்குகின்ற உலகத்துப் பொருள்களின் குணங்கள் பண்புகள் எனப்படும்.

## உயிர்ப்பொருள்

**444. மெய்ந்நா மூக்கு நாட்டம் செவிகளின்**
**ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமேல் உணர்தலின்**
**ஓரறிவு ஆதியா உயிர்ஐந்து ஆகும்**

மெய்யும், நாவும், மூக்கும், கண்ணும், காதும் ஆகிய ஐம்பொறிகளாலும் முறையே ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஓசை என்னும் ஐம்புலன்களையும் அறியுமிடத்து, ஒன்று முதலாகக் கீழ்ப்போன புலனையும் கொண்டு மேல்வரும் புலன்களை ஒவ்வொன்றாக அறிவதால் ஓரறிவு முதலாக உயிர் ஐந்து வகைப்படும்.

## ஓரறிவுயிர்

**445. புல்மரம் முதல உற்று அறியும்ஓ ரறிவு உயிர்**

புல், மரம் முதலியன மெய்யால் தொட்டு அறிகிற ஓர் அறிவுடைய உயிர்களாகும்.

## ஈரறிவுயிர்

**446. முரள்நந்து ஆதிநா வறிவொடு ஈரறிவுஉயிர்**

சிப்பி, சங்கு முதலியன முன்சொன்ன மெய்யறிவுடன் நாவால் சுவையை அறியும் அறிவோடு ஈரறிவு உயிர்கள் ஆகும்.

## மூவறிவுயிர்

**447. சிதல்எறும்பு ஆதிமூக் கறிவின்மூ வறிவு உயிர்**

கரையான், எறும்பு முதலியவை உற்று, சுவைத்து அறிதலோடு மூக்கால் நாற்றத்தை அறியும் அறிவையும் பெற்ற மூவறி வுயிர்களாம்.

(எகா)

ஈயல், அட்டை

## நாலறிவுயிர்

**448. தும்பிவண் டாதிகண் ணறிவினா லறிவுயிர்**

தும்பி, வண்டு முதலியன உற்றுச் சுவைத்து முகர்ந்து அறிதலோடு காட்சி அறிவையும் பெற்ற நாலறிவுயிர்களாம். நண்டு, தேனீ முதலியனவும் நாலறிவு உயிர்களாம்.

## ஐயறிவுயிர்

**449. வானவர் மக்கள் நரகர் விலங்குபுல்**
**ஆதிசெவி அறிவோடு ஐயறி வுஉயிரே**

தேவர், மக்கள், நரகர், விலங்கு, புள் முதலியன உற்று, சுவைத்து, முகர்ந்து, கண்டு அறிதலோடு கேட்டறியும் அறிவையும் பெற்ற ஐயறிவுயிர்களாம்.

## உயிரல்லாத பொருள்

**450. உணர்விய லாம்உயிர் ஒன்றும் ஒழித்த**
**உடன்முதல் அனைத்தும் உயிரல் பொருளே**

அறிவு மயமாகிய உயிர் ஒன்றையும் நீக்கப்பெற்ற உடம்பு முதலாகிய அனைத்துப் பொருள்களும் உயிரல்லாத பொருள்கள் ஆகும்.

## புறனடை

**451. ஒற்றுமை நயத்தின் ஒன்றெனத் தோன்றினும்**
**வேற்றுமை நயத்தின் வேறே உடல்உயிர்**

உயிர் உடலுடன் ஒன்றி நிற்கும் பண்பால் இரண்டும் ஒன்றெனத் தோன்றினாலும், உணர்தல் தன்மையதான உயிரும், உணர்தலற்ற உடலும் வேறுபாடுடைய தன்மையால் வேறு ஆகும்.

## உயிர்ப் பொருள்களின் குணம்

**452. அறிவு அருள் ஆசை அச்சம் மானம்**
**நிறைப்பொறை ஓர்ப்புக் கடைப்பிடி மையல்**
**நினைவு வெறுப்புவப்பு இரக்கம் நாண் வெகுளி**
**துணிவு அழுக் காறுஅன்பு எளிமை எய்தல்**
**துன்பம் இன்பம் இளமை மூப்புஇகல்**
**வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம்மதம்**
**மறவி இனைய உடல்கொள் உயிர்க் குணம்**

புத்தி, அருளுடைமை, விருப்பம், பயம், மானம், அடக்கம், பொறுத்தல், ஆராய்ந்து தெளிதல், கடைப்பிடித்தல், காமமயக்கம், எண்ணம், வெறுத்தல், மகிழ்ச்சி, இரக்கம், வெட்கம், வெகுளி, துணிவு, பொறாமை, அன்பு, எளிமை, தளர்ச்சி, துன்பம், இன்பம், இளமை, முதுமை, பகைமை, வெற்றி, மறத்தல், ஊக்கம், வீரம், மதம், குற்றம் என்னும் முப்பத்திரண்டும் இவை போல்வன பிறவும் உடலோடு கூடிய உயிர்களினுடைய குணப்பண்புகள் ஆகும்.

## உயிர்ப் பொருள்களின் தொழிற் பண்பு

**453. துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல்**
**உய்த்தல் ஆதி உடலுயிர்த் தொழிற்குணம்**

அனுபவித்தல், உறங்குதல், வணங்குதல், அணிதல், செலுத்தல் போல்வன உடம்போடு கூடிய உயிர்களின் தொழிற்பண்புகள் ஆகும். ஆதி என்றதனால் வாழ்த்தல், அரற்றுதல், வரைதல் முதலியனவும் கொள்க.

## உயிரில்லாப் பொருள்களின் குணப்பண்பு

**454. பல்வகை வடிவு இரு நாற்றம்ஐ வண்ணம்**
**அறுசுவை ஊறுஎட்டு உயிரல் பொருட்குணம்**

வட்டம், கோணம், முக்கோணம், சதுரம் முதலிய பலவகை வடிவங்களும். நல்ல, கெட்ட நாற்றங்களும். வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என்னும் ஐவகை நிறங்களும். கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, இனிப்பு என்னும் அறுவகைச் சுவைகளும். வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, நொய்ம்மை, சீர்மை, இழுமெனல் சருச்சரை என்னும் எட்டுவகை ஊறுகளும் உயிர் அல்லாத பொருள்களின் குணங்கள் ஆகும்.

## இருவகைப் பொருள்களுக்கும் பொதுவாகிய தொழிற்பண்பு

**455. தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்**
**நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல்**
**ஈதல் இன்னன இருபொருள் தொழிற்குணம்**

தோன்றல், மறைதல் வளர்தல், சுருங்கல், நீங்கல், அடைதல், நடுங்கல், இசைத்தல், ஈதல் என்னும் ஒன்பதும். இவை போல்வன பிறவும், உயிர்ப்பொருளும், உயிரல்லா பொருளும் ஆகிய இரண்டற்கும் பொதுவாகிய தொழிற் குணங்கள் ஆகும். இன்னன என்பதால் அசைத்தல் முதலியனவற்றை கொள்க.

## ஒரு குணம் தழுவிய உரிச்சொல்

**456. சால உறுதவ நனிகூர் கழிமிகல்**

சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் ஆறும் மிகுதியாகிய ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள் ஆகும்.

(எகா)

பருவந்து சாலப் பலகொலன் றெண்ணி, உறுவளி துரக்கு முயர்சினை மாவின்

## பலகுணம் தழுவிய உரிச்சொல்

**457. கடிஎன் கிளவி காப்பே கூர்மை**
**விரையே விளக்கம் அச்சம் சிறப்பே**
**விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்**
**வரைவே மன்றல் கரிப்பின் ஆகும்**

கடி என்னும் உரிச்சொல் காவல், கூர்மை, வாசனை, விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஒலித்தல், நீக்கல், மணம், கரிப்பு ஆகிய பதின்மூன்று குணங்களிலும் வரும்

(எகா)

கடிநகர் அடைந்து – காப்பு
கடிநுனைப் பகழி - கூர்மை
எம்மம்பு கடி விடுதும் - விரைவு

## ஒரு குணம் தழுவிய உரிச்சொல்

**458. மற்றம் நுவற்சிசெப்பு உரைகரை நொடிஇசை**
**கூற்றுப் புகறல் மொழிகிளவி விளம்புஅறை**
**பாட்டுப் பகர்ச்சி இயம்பல் சொல்லே**

மாற்றம், நுவற்சி, செப்பு, உரை, கரை, நொடி, இசை, கூற்று, புகறல், மொழி, கிளவி, விளம்பு, அறை, பாட்டு, பகர்ச்சி, இயம்பல் ஆகிய பதினாறும், சொல் என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச் சொற்கள் ஆகும்.

(எகா)

கோவலர்வாய் மற்ற முணர்ந்து - மாற்றம்
இருபிறப்பாளர் பொழுதறிந்து நுவல் - நுவற்சி
தெருண்டாரவை செப்பலுற்றேன் - செப்பு

## இதுவும் அது

**459. முழக்கு இரட்டு ஒலிகலி இசைதுவை பிளிறுஇரை**
**இரக்கு அழுங்கு இயம்பல் இமிழ்குளிறு அதிர்குரை**
**கனைசிலை சும்மை கௌவை கம்பலை**
**அரவம் ஆர்ப்போடு இன்னன ஓசை**

முழக்கு, இரட்டு, ஒலி, கலி, இசை, துவை, பிளிறு, இரை, இரங்கு, அழுங்கு, இயம்பல், இமிழ், குளிறு, அதிர்வு, குரை, கனை, சிலை, சும்மை, கௌவை, கம்பலை, அரவம், ஆர்த்த என்ற இருபத்திரண்டும் இவை போல்வன பிறவும் ஒசை என்னும் ஒரு குணத்தை உணர்த்துகின்ற உர்ச் சொற்கள் ஆகும்.

(எகா)

முழக்கு, இரட்டு, ஒலி, கலி

## இவ்வியலுக்குப் புறனடை

**460. இன்னது இன்னுழி இன்கணம் இயலும்**
**என்றிசை நூலுள் குணகுணிப் பெயர்கள்**
**சொல்லாம் பரத்தலில் பிங்கலம் முதலா**
**நல்லோர் உரிச்சொலின் நயந்தனர் கொளலே**

பெயர், வினை, இடை, உரி, என்னும் நால்வகைச் சொற்களில் இன்னசொல் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்களிலும். வழக்கு, செய்யுள் ஆகிய ஈரிடங்களிலும், இவ்விடங்களில் இவ்விலக்கணம் உடையதாய் வரும் எனச் சொல்லுமாறு அமைந்த இந்நூலுள் பண்புப் பெயர்களும், பண்பில் பெயர்களும் வரித்து கிடத்தலால் அவைகுறித்து இங்கு விரித்துக் கூறவில்லை. அவற்றை விரும்புவோர், பிற நல்லறிவுடைய புலவர்களால் கூறப்பட்ட பிங்கலந்தை முதலிய நிகண்டு நூல்களில் விரும்பிக் கண்டறிந்து கொள்க. மற்ற சொற்களுக்கும் இதுவே புறனடையாகும்.

## இவ்வதிகாரத்திற்குப் புறனடை

**461. சொற்றொறும் இற்றிதன் பெற்றியென்று அனைத்தும்**
**முற்றமொழிகுறின் முடிவில ஆதலின்**
**சொற்றவற் றியலான் மற்றைய பிறவும்**
**தெற்றென உணர்தல் தெள்ளியோர் திறனே**

சொற்கள் தோறும் இதன் இலக்கணம் இத்தகையது என முழுவதும் நிறைவுறச் சொல்லப் புகுந்தால் வரையறை இல்லாமல் போகும். ஆதலால், எடுத்துக் கூறப்பட்ட சொற்களினுடைய இலக்கணங்களைக் கொண்டு சொல்லப்படாதவற்றின் இலக்கணங்களையும் ஒப்புசை கருதி இதுவும் அது போன்றது எனத் தெளிவாக அறிந்து கொள்ளுதல் மாணாக்கரது கடமையாகும்.

## இந்நூலிற்குப் புறனடை

**462. பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல கால வகையி னானே**

முற்காலத்து உள்ள இலக்கணங்களுள் சில பிற்காலத்து வழக்கிழந்து மறைதலும், முற்காலத்தில் இல்லாத சில பிற்காலத்து வழக்கின் காரணமாக இல்க்கணமாக வருதலும் தவறாகாது. கால வேறுபாடு பற்றியதாதலால்.

**மாதிரி வினா**

1. மொழி எத்தனை வகைப்படும் அவை யாவை?
2. வினைச் சொல்லின் பொதுவிளக்கணம் கூறுக.
3. பொது இலக்கணம் குறித்து விவரி.
4. தொகைநிலைத் தொடர்மொழி குறித்து விளக்குக.
5. வினா எத்தனை வகைப்படும் அதன் வகைகள் யாவை?
6. தொகாநிலைத் தொடர் மொழி குறித்து விவரி.
7. விடை எத்தனை வகைப்படும் அதன் வகைகளை விளக்குக.
8. அடுக்கு தொடர் குறித்து விவரி.
9. வேற்றுமை என்றால் என்ன? வேற்றுமை எத்தனை வகைப்படும் நன்னூல் வழி விளக்கு.
10. பெயரெச்சம் என்றால் என்ன?
11. வினையெச்சம் என்றால் என்ன?
12. இடைச்சொல் என்றால் என்ன? அவற்றின் பொதுவிளக்கணம் தருக.
13. உரிச்சொல் எத்தனை வகைப்படும் அதன் வகைகளை விளக்குக.
14. சொல்லின் வகையை நன்னூலார் வழி விளக்குக.
15. ஆகுபெயர் குறித்து கட்டுரை வரைக.
16. வினைமுற்று என்றால் என்ன? அதன் வகைகளை விவரி.
17. வேற்றுமை தொகை குறித்து நன்னூல் வழி விளக்குக.
18. வழாநிலை குறித்து நன்னூலார் வழி விளக்குக.
19. வழுவமைதி குறித்து விவரி.
20. பொருள்கோளின் பெயரும், தொகையும் குறித்து கட்டுரை வரைக.

பார்வை நூல்கள்


1. நன்னூல் சொல்லரிகாரம் - சோம. இளவரசு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2018.
2. நன்னூல் மூலமும் உரையும் - கோ. வில்வபதி, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.
3. நன்னூல் சொல்லதிகாரம் காண்டிகை உரை - திருஞானசம்பந்தம், கதிர் பதிப்பகம், திருவையாறு, 2006.
4. இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி - பெ சுயம்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004.
5. நன்னூல் சொல்லதிகாரம் எளிய உரை - முனைவர் சு. அழகேசன் சுதா பதிப்பகம், தூத்துக்குடி.



முனைவர் த.க. ஜாஸ்மின் சுதா
துறைத்தலைவர் (பொ)
உதவிப் பேராசிரியர்
தமிழியல் துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி